KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 13 March 2026 இதழ்:- 10

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழம் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600


# தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பு முயற்சி வெற்றி பெறுமா?

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் தமிழ்ச் சட்டத்தரணிகளின் பேரவை ஈடுபட்டிருக்கிறது. இது தொடர்பாக வெளிவந்த உத்தியோகபூர்வ தகவல்களின்படி ஒரு புதிய யாப்பை அரசாங்கம் உருவாக்குமாக இருந்தால் அந்த யாப்பில் இனப் பிரச்சினைக்கான தீர்வாக எப்படிப்பட்ட ஒரு தீர்வு முன் வைக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் தமிழ் கட்சிகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கம் என்று கூறப்படுகிறது. குறிப்பாக சமஸ்டி தீர்வு ஒன்றை நோக்கி கட்சிகளை ஒருங்கிணைக்கும் நோக்கம் இதில் உண்டு என்பதனை அந்த உத்தியோகபூர்வ அறிக்கை காட்டுகிறது.(17ம் பக்கம் பார்க்க)






# இலங்கைக்கு அருகே ஈரானியக் கப்பலை ஏன் மூழ்கடித்தீர்கள்? அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்!




இலங்கை கடற்கரைக்கு அப்பால் ஈரானிய போர்க்கப்பலை மூழ்கடிப்ப தற்கு எடுக்கப்பட்ட முடிவு குறித்து தான் கேள்வி எழுப்பியதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். கென்டக்கி மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பேரணி ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி டிரம்ப் குறித்த கப்பலைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக அதனை ஏன் அழித்தீர்கள் என்று தான் இராணுவ அதிகாரிகளிடம் கேட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். (3ம் பக்கம் பார்க்க)

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் தவறு செய்யாதவர்கள் அஞ்சமடையத் தேவையில்லை!

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான விசாரணைகள் எவ் வித அரசியல் பாகுபாடுமின்றி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், தவறு செய்யாத எவரும் இது குறித்து அச்சமடையத் தேவை யில்லை என்றும் பிரதி அமைச்சர் (24ம் பக்கம் பார்க்க)



## கனடாவில் 3வது முறையாக லொத்தர் சீட்டில் பரிசு பெற்ற நபர்

அதிர்ஷ்ட தேவதை ஒருவருக்கு மீண்டும் மீண்டும் கதவைத் தட்டுவது அரிதான விடயம். ஆனால், கனடாவின் வடக்கு ஒன்டாரியோவைச் சேர்ந்த மார்செல் லெக்லேர் (Marcel Leclaire) என்பவருக்கு இது (4ம் பக்கம் பார்க்க)


எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு
ஈழநாடு

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*



**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX ACE Experience the Difference Realty Inc., Brokerage — Independently owned & operated — we are ace

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




REALTOR MLS


23 Years Real Estate Experience


150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada


**Bus: 416-293-4500**


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Adelaide Ave E / Simcoe St

**Oshawa** — $699,000
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area


### Kingston Rd & Sheppard Ave E

**Scarborough** — $710,000
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area


### Islington Ave / Steeles Ave W

**Toronto** — $749,000
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse

### Neilson Road & Sheppard

**Scarborough** — $839,000
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!

### Danforth and Dawes

**Toronto** — $839,999
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views

### Williamson & Westney

**Ajax** — $849,000
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home

### Rogers and Dufferin St

**Toronto** — $849,999
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom


### Markham Rd & Lawrence Ave

**Scarborough** — $999,000
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow


### Harmony Road / Conlin Road

**Oshawa** — $999,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom

### Cameo St / Burkolder Dr


**Pickering** — $999,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home

### Hwy10 / Hwy 89

**Shelburne** — $999,900
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home

### Markham/Steeles

**Markham** — $999,999
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

### Markham Rd/ Lawrence Ave E
FOR LEASE

**Scarborough** — $2,700
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

### Markham Rd & Sheppard Ave
FOR LEASE

**Scarborough** — $2,250
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

### Simcoe St/ Windfields Farm Dr
FOR LEASE

**Oshawa** — $1,500
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

### Markham & Denison
FOR LEASE

**Markham** — $1,450
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

# EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# இலங்கைக்கு அருகே ஈரானியக் கப்பலை ஏன் மூழ்கடித்தீர்கள்? அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்!



இலங்கை கடற்கரைக்கு அப்பால் ஈரானிய போர்க்கப்பலை மூழ்கடிப்ப தற்கு எடுக்கப்பட்ட முடிவு குறித்து தான் கேள்வி எழுப்பியதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரி வித்துள்ளார். கென்டக்கி மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பேரணி ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி டிரம்ப், குறித்த கப்பலைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக அதனை ஏன் அழித்தீர்கள் என்று தான் இராணுவ அதிகாரிகளிடம் கேட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாம் ஏன் அவர்களைக் கொன்றோம்? அவர்களைக் கைது செய்து நமது கடற்படையில் சேர்த்திருக்க முடி யாதா?' என்று தான் அதிகாரிகளிடம் கேட்டதாக அவர் அங்கு தெரிவித்தார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கப்பலைக் கைப் பற்றுவதை விட அதனை மூழ்கடிப்பதே சிறந்தது என்று தனது ஜெனரல் ஒருவர் தன்னிடம் கூறியதாகவும், அவர் அதனை 'ஐயா, அதுதான் அதிக வினோதமானது' என்று விவரித் ததாகவும் டிரம்ப் மேலும் குறிப்பிட் டார்.

கடந்த வாரம் இலங்கைக்கு அருகி லுள்ள சர்வதேச கடற்பரப்பில், அமெ ரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றினால் நடத்தப்பட்ட டார்பிடோ தாக்குதலில் ஈரானிய கடற்படைக்குச் சொந்தமான 'Frigate' ரகத்தைச் சேர்ந்த IRIS Dena என்ற கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் 104 கடற்படை யினர் உயிரிழந்ததுடன், 32 பேர் காய மடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈரானுக்கு எதிரான போரில் மாபெரும் வெற்றி!

## எப்போது வேண்டுமானாலும் தாக்குதலை நிறுத்துவேன் - ட்ரம்ப்

ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடி க்கைகளில் அமெரிக்கா முழுமையான வெற்றியைப் பெற்றுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளார்.

ஈரானுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆபரேஷன் எபிக் ஃபியூ ரி (Operation Epic Fury) இராணுவ நடவடிக்கை மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. இதன் மூலம் ஈரானுக்கு எதிரான தாக்கு தலில் அமெரிக்கா வெற்றி பெற்று விட்ட தாக அவர் உறுதிபடத் தெரிவித் துள்ளார்.

கடந்த 11 நாட்களில் அமெரிக்க இராணு வம் ஈரானை கிட்டத்தட்ட அழித்து விட்டது என்றும், குறிப்பாக அந்நாட் டின் விமானப்படை முற்றாகச் சிதைக்க ப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டு ள்ளார்.

ஈரானிடம் தற்போது போரிடுவதற்கு எதுவுமில்லை எனத் தெரிவித்துள்ள ட்ரம்ப், அந்நாட்டின் 90வீத ஏவுகணை கள் மற்றும் 86வீத ட்ரோன்கள் அமெரிக்காவினால் சுட்டு வீழ்த்தப்பட்டு ள்ளதாகத் புள்ளிவிபரங்களுடன் தெரிவித் துள்ளார். ஈரானின் பயங்கரவாத ஆட்சி யால் ஏற்பட்ட அச்சுறுத்தலைத் தடுக் கவே இந்தத் தீர்மானமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டி னார். ஈரானில் இனி அழிப்பதற்கு எதுவு மில்லை எனக் கூறியுள்ள ட்ரம்ப், தான் எப்போது வேண்டுமானாலும் இந்தத் தாக்குதலை நிறுத்துவதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈரானில் ஆட்சியை மாற்றுவது அந்நாட்டு மக்களின் கைகளில் தான் உள்ளது என்றும், அடக்குமுறை அமைப்பில் இருந்து அவர்கள் தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரி வித்துள்ளார்.
இஸ்ரேலும் அமெரிக்காவும் இணை ந்து ஈரான் மீது தாக்குதலை தொட ங்கி தொடர்ந்து போர் தீவிரமடைந்து வருகிறது. இதனால், உலகின் பல் வேறு நாடுகளில் எரிபொருள் தட்டுப் பாடு அதிகரித்துள்ளது. இந்தப் போர் தொடருமானால், அது சர்வதேச அள வில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது. இந்நிலையில் இஸ்ரேலில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ''ஈரானின் தற்போதைய அரசியல் தலைமையின் எதிர்காலம் அந்நாட்டு மக்களின் கைகளில்தான் உள்ளது. தற்போதைய ஆட்சியை, அடக்குமுறை ஆட்சி என அவர்கள் கூறுகிறார்கள். அத் தகைய அமைப்புக்கு எதிராக எழுந்து நிற்கும் அவர்களின் மனநிலையைப் பொறுத்தே ஈரானில் ஆட்சி மாற்றம் என்பது இருக்கும்
ஈரானிய மக்கள் அடக்குமுறை ஆட்சியில் இருந்து விடுபடுவதற்கு உதவுவதே இஸ்ரேலின் நோக்கம். இறுதியில் இது அவர்களிடமே இருக் கிறது. இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் நாம் அவர் களின் சக்தியை பலவீனப்படுத்தி (22ம் பக்கம் பார்க்க)


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# கனடாவில் 3வது முறையாக லொத்தர் சீட்டில் பரிசு பெற்ற நபர்




அதிர்ஷ்ட தேவதை ஒருவருக்கு மீண்டும் மீண்டும் கதவைத் தட்டுவது அரிதான விடயம். ஆனால், கனடாவின் வடக்கு ஒன்டாரியோவைச் சேர்ந்த மார்செல் லெக்லேர் (Marcel Leclaire) என்பவருக்கு இது மூன்றாவது முறையாக நிகழ்ந்துள்ளது.

அண்மையில் அவர் விளையாடிய லாட்டரியில் 88,888 டாலர்களை வென்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார். சட்பரி பகுதியைச் சேர்ந்த 73 வயதான ஓய்வுபெற்ற டாக்ஸி ஓட்டுநரான மார்செல் கடந்த 40 ஆண்டுகளாக லாட்டரி விளையாடி வருகிறார்.

இம்முறை அவர் `Instant Lunar 8s' என்ற ஸ்கிராட்ச் கார்டைத் தேர்வு செய்ததற்கு ஒரு சுவாரஸ்யமான காரணம் உண்டு என குறிப்பிடுகின்றார்.

ஹாக்கி வீரர் டேவிட் பாஸ்டர்னாக்கின் (David Pastrňák) தீவிர ரசிகரான லெக்லர், அந்த வீரரின் ஜெர்சி எண் 88 ஐ லாட்டரி சீட்டில் 8 என்ற எண்ணைக் கண்டதும், தனது அபிமான வீரரின் நினைவாக அந்த டிக்கெட்டை கொள்வனவு செய்துள்ளார்.

அதுவே அவருக்குப் பெரிய பரிசைப் பெற்றுத் தந்து விட்டது. மார்செல் லெக்லேர் இதற்கு முன்பும் மிகப் பெரிய தொகைகளை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது:

- 2017ல்: 'Encore' விளையாட்டின் மூலம் $1 மில்லியன் டாலர்கள்
- 2025ல்: 'Instant Platinum $3 மில்லியன் டாலர்கள்
- 2026ல்: இப்போது `Instant Lunar 8s' மூலம் கூ88,888 டாலர்கள். `டிக்கெட்டைச் சரி பார்த்த போது நான் அப்படியே அதிர்ச்சியில் உறைந்து நின்றேன். முதல்முறை வென்றபோது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்ததோ, அதே உணர்வு இப்போதும் ஏற்பட்டது,என மார்செல் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இந்த வெற்றித் தொகையை வைத்து ஒரு புதிய வீடு மற்றும் அதற்குத் தேவையான தளபாடங்கள் வாங்க மார்செல் திட்டமிட்டுள்ளார். எஞ்சிய தொகையைத் தனது எதிர்காலத் தேவைகளுக்காகச் சேமித்து வைக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க சர்வாதிகாரி அடால்ஃப் ஹிட்லரின் கையெழுத்திட்ட அரசியல் அறிக்கையான `மெயின் காம்ப்' (Mein Kampf) புத்தகத்தை வைத்திருந்ததாக எழுந்த புகாரைத் தொடர்ந்து கனடாவின் நயாகரா மாநகரசபைப் பிராந்தியத் தலைவர் பாப் கேல் (Bob Gale)> தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். யூத எதிர்ப்பு மற்றும் வெறுப்புணர்வின் அடையாளமான ஒரு புத்தகத்தை வைத்திருந்தமைக்காகவே பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

# ஆசிய பில்லியனர்கள் பட்டியலில் முகேஷ் அம்பானி முதலிடம்



இந்திய தொழிலதிபரும் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவருமான முகேஷ் அம்பானியின் (68) சொத்து மதிப்பு நடப்பு ஆண்டில் 99.7 பில்லியன் டொலராகும். இந்த சொத்து மதிப்பின் அடிப்படையில், அவர் போர்ப்ஸ் வெளியிட்டுள்ள ஆசிய பில்லியனர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றிருக்கிறார்.

இந்த சொத்து மதிப்பானது, 100 பில்லியன் டொலருக்கு சற்றே குறைவாக உள்ளது. அதன் அடிப்படையில், 100 பில்லியன் சொத்து மதிப்புள்ள பணக்காரர் என்ற நிலையை அவர் அண்மித்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், ஃபோர்ப்ஸ் சஞ்சிகை வெளியிட்டுள்ள உலகளாவிய செல்வந்தர்களின் பட்டியலில் முகேஷ் அம்பானி 21வது இடத்தில் உள்ளார்.

அதேவேளை, அதானி குழுமத் தலைவரான கௌதம் அதானியின் சொத்து மதிப்பு 63.8 பில்லியன் டொலர் என கணிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கா செல்லும் கனடிய எதிர்க்கட்சித் தலைவர்

கனடாவின் கன்சர்வேடிவ் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான பியர் பொய்லிவ்ரே வர்த்தகம் மற்றும் எரிசக்தி தொடர்பான முக்கியப் பேச்சுவார்த்தைகளுக்காக இந்த வாரம் அமெரிக்காவிற்குப் பயணம் மேற்கொள்கிறார். அமெரிக்காவுடனான வர்த்தகத்தில் விதிக்கப்படும் வரிகளை நீக்கி, தடையற்ற வர்த்தகத்தை உறுதி செய்ய அவர் வலியுறுத்தவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

வாஷிங்டன் எடுக்கும் ஒவ்வொரு முடிவையும் கனடாவால் கட்டுப்படுத்த முடியாது, பேச்சுவார்த்தைகளை நான் அரசிடமே விட்டுவிடுகிறேன். ஆனால், அமெரிக்க மக்களுடனான நமது நல்லுறவையும் பொதுவான நலன்களையும் நாம் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பொய்லிவ்ரே தனது சமூக வலைதள வீடியோவில் தெரிவித்துள்ளார்.



# நலிவுற்றோர் நலம் பேண கை கொடுப்போம் வாரீர்!




வுங்கள் அபிமான ஈழநாடு eelanadu.ca பத்திரிகையின்

## 33 வது ஆண்டு விழா

தமிழகத்தின் முன்னணித் திரைப்படப் பாடகரும்
பிரபல கர்நாடக இசைக் கலைஞருமான
**சத்தியப்பிரகாஷ்**
இந்திய - கனேடிய பக்கவாத்தியக்
கலைஞர்களுடன் இணைந்து வழங்கும்

## ஏழிசைக் கீதங்கள்

(பாரதியார் பாடல்கள், தமிழிசைப் பாடல்கள், கர்நாடக இசை கலந்த திரைப்படப் பாடல்கள்)

Saturday
MARCH 21
2026
5:30PM

அன்பளிப்பு
VIP
$100 $50

சிறப்புச் சொற்பொழிவு: ஈழத்திலிருந்து வருகைதரும்
தமிழருவி சிவகுமாரன்
தாயகத்து வேர்களும்
கனடிய விழுதுகளும்



ARMENIAN COMMUNITY CENTRE
50 HALLCROWN PLACE, TORONTO
(VICTORIAL PARK & CONSUMER ROAD)

விழா சரியாக 5.30 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும்.
தயவு செய்து நுழைவுச் சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும். நேரடி ஒளி-ஒலிபரப்புக்கு அனுமதி இல்லை.

AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
Ajith Sabaratnam
647.401.5800
647.594.9573
email:ajithsaba@gmail.com
10 THORNMOUNT DR SCARBOROUGH, ONTARIO M1B 3J4
Tel: 416.439.2800

Cash Point PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

Vijaya Jewellery
3341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5
+1 (437) 833-3197, (647) 329-3062
Email:yugan14@hotmail.com

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில் கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarborough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

கனகாம்பிகை அடகுமாடம்
தங்க நகைக் கடன் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படும்
தொடர்புகட்கு 416-754-7198
At Woodside Square Mall, 1571 SANDHURST CIRCLE #159D (Finch & McCowan) Scarborough, ON
2613 EGLINTON AVE, (Brimley & Eglinton) Toronto, ON

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Outstanding Agent for Outstanding Results.
Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

PACELAW
Over 40 years of putting our clients first
Poorany Sornabala
Desmond Sornabala
Call Us Today
647-968-7059
Get In Touch
191 The West Mall Suite 1100 Toronto ON, M9C 5K8
psornabala@pacelawfirm.com
www.pacelawfirm.com
Personal Injury
Corporate & Commercial
Immigration
Family Law
Real Estate
Wills and Estates
Employment Law
Civil Litigation
Criminal Defence Law
Business Facilitation Services

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
CALL: DHARMA
647-713-6049

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5%
2%
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave. E, Scarborough. ammapawnbroker@gmail.com

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

N.K.S DRAPERY & BLINDS FABRIC
Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies • Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:info@nksdrapery.com Web:www.nksdrapery.com

MORTGAGE LOAN
J.R.B UNIVERSAL INC.
ALMOST ALL SERVICES AVAILABLE
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

Chapel Ridge FUNERAL HOME CREMATION CENTRE
FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
S. Christeen
416-258-6759

INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6718
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct

Chapel Ridge Funeral Home & Cremation Centre
Vilosan Sivathurman
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

நந்தா NANTHA CATERS
Catering, Bakery & Take Out
Call 416 NANTHA 1 · 416 626 8421

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு
உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
ANANTH Tharmalingam
Sales Representative
416.939.9525

Santha Panchalingam
சாந்தா பஞ்சலிங்கம்
Board of Director
பணிப்பாளர்
416-200-5470
santha@tamilcentre.ca
www.tamilcentre.ca

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn
www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com

# சுரேஷ் சலேவுக்கு எதிராக 3 பிரதான குற்றச்சாட்டுகள்!



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானி மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவுக்கு எதிராக 3 பிரதான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

கோட்டை நீதவான் இசுரு நெத்திகுமார முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே குற்றப் புலனாய்வு திணைக்களம் இந்த விபரங்களை வெளியிட்டது. குற்றப்புலனாய்வுத் திணைக்களம் சமர்ப்பித்த 25 பக்கங்கள் கொண்ட மேலதிக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

2018 நவம்பர் 29 அன்று வவுணதீவில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டமை மற்றும் 2019 ஏப்ரல் 26 அன்று சாய்ந்தமருது வீட்டில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணைகளைத் திட்டமிட்டு திசை திருப்பியமை.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர் ஒருவரைப் பயன்படுத்தி, நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி தேவாலயத்தை முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்குச் சுரேஷ் சலே அடையாளம் காட்டிக் கொடுத்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பாணந்துறைப் பகுதியில் உள்ள மற்றுமொரு புலனாய்வாளர் இவ்வாறான தாக்குதல் ஒன்று நடைபெறவுள்ளதாக முன்னரே எச்சரித்தும், புலனாய்வுப் பிரிவு அது குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை.

தாக்குதலுக்குப் பின்னர் அந்த புலனாய்வாளர் விடுதலையான போது சுரேஷ் சலே அவரை ஒரு ஹோட்டலுக்கு அழைத்து நன்றி தெரிவித்துள்ளமை விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது குண்டு வெடிப்பின் போது உயிரிழந்ததாகக் கூறப்படும் சாரா ஜஸ்மின் என்பவரின் உடல் பாகங்கள் இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட DNA பரிசோதனைகளிலும் உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், மூன்றாவது முறையும் DNA பரிசோதனை செய்யுமாறு சுரேஷ் சலே விசாரணை அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்தது. முன்னாள் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் இது குறித்து வாக்குமூலம் அளித்துள்ளனர்.

சுரேஷ் சலே சார்பாக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்த போது சுரேஷ் சலே இலங்கையில் இருக்கவில்லை எனவும் அவர் மலேசியாவில் இருந்தார் எனவும் குறிப்பிட்டார். ஏற்கனவே 25-க்கும் மேற்பட்ட விசாரணைகள் முடிவடைந்த நிலையில் தற்போது இந்த புதிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவது பக்கச்சார்பானது என தெரிவித்தார்.

சுரேஷ் சலே மிகவும் கொடூரமான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரது மகனைப் பார்க்கக் கூட பொலிஸ் சான்றிதழ் கேட்கப்படுகிறது. சட்டத்தரணிகளுடன் அவர் பேசும் விபரங்கள் இரகசியமாகப் பதிவு செய்யப்படுகின்றன. இது அடிப்படை உரிமை மீறலாகும் என சுட்டிக் காட்டினார்.

இந்த விசாரணை அதிகாரிகள் என்ன பேசுகிறார்கள்? அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளராக இருந்த எனது கட்சிக்காரர், எவ்வாறு பாதுகாப்புச் சபையைக் கூட்டி, பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட விசாரணை அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்க முடியும்?

அரச புலனாய்வுச் சேவையும் பொலிஸ் மா அதிபரின் கீழேயே இயங்குகின்றது. நீங்கள் குறிப்பிடும் அந்த பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் அக்காலத்தில் சீருடை அணிந்து தானே கடமையாற்றினார்கள்? இது வெட்கக்கேடானது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்த போது இந்த மூன்றாவது சந்தேகநபர் இலங்கையில் இருக்கவே இல்லை. அவர் மலேசியாவில் இருந்தார். அவர் 2018 ஜனவரி மாதமே இலங்கையை விட்டு வெளியேறி விட்டார். அது மட்டுமன்றி இதுவரை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து 25க்கும் மேற்பட்ட விசாரணைகள் நடத்தப் பட்டுள்ளன. ஆரம்பத்தில் இந்தியா விலிருந்து முன்னெச்சரிக்கை தகவல் கிடைத்ததாகவும், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கூறி முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகி யோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் இப்போது யாரோ ஒருவர் புலனாய்வுப் பிரிவுக்கு முன்கூட்டியே தகவல் வழங்கியதாகக் கூறுகிறார்கள்.

யார் தகவல் கொடுத்திருந்தாலும், அந்தத் தகவல் கிடைத்தும் தாக்குதலைத் தடுக்கத் தவறிய அன்றைய ஊஜனு அதிகாரிகள் தான் இன்றும் இந்த விசாரணைகளை வழி நடத்துகிறார்கள். அவர்கள் அன்றே தாக்குதலுக்கு முன்னர் சஹ்ரானை கைது செய்திருந்தால் இந்த எந்த விசாரணைகளுமே தேவையில்லையே. இந்த ஜயகிடி அல்விஸ் அறிக்கையை வாசித்துப் பாருங்கள். இதை வாசித்தால் யார் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்பது புரியும். இவ்வாறானவர்கள் இந்த விசாரணையை முன்னெடுக்கும் போது இது எவ்வாறு ஒரு பக்கச் சார்பற்ற விசாரணையாக அமைய முடியும்?

இந்நிலையில் இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதவான் இசுரு நெத்திகுமார, சுரேஷ் சலே தொடர்பாக முன் வைக்கப்பட்டுள்ள விடயங்கள் நேரடியாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவை. இந்தச் சாட்சிகள் போதுமானதா என்பதை மேலதிக விசாரணைகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.



# இலங்கையின் இறையாண்மையை மதிப்பதாக அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களம் தெரிவிப்பு



ஈரானிய போர்க்கப்பல் மற்றும் அதன் பணியாளர்கள் தொடர்பான விவகாரங்களைக் கையாளுவதில் இலங்கையின் இறையாண்மையை மதிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில், குறித்த கப்பல், அதன் பணியாளர்கள் மற்றும் மீட்கப்பட்ட ஈரானிய மாலுமிகள் தொடர்பான இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம், இலங்கையின் உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் சர்வதேச சட்டக் கடப்பாடுகளுக்கு இணங்க இலங்கைக்கே உரியது எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக புதுடில்லியில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் உரையாற்றிய இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், சர்வதேச உடன்படிக்கை கடப்பாடுகளின் கீழ் 'IRIS Dena' என்ற ஈரானிய போர்க்கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 32 மாலுமிகளுக்கு வழங்கி வருவதாகத் தெரிவித்திருந்தார்.
கடந்த புதன்கிழமை இலங்கையின் தெற்குக் கடற்பரப்பில் வைத்து அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலினால் ஈரானிய போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இலங்கை கடற்படையினர் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு உயிர் பிழைத்தவர்களை மீட்டதுடன், 84 சடலங்களையும் மீட்டெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈரான் கப்பல்களில் இருந்து மீட்கப்பட்ட குழுவினருக்கு சுமார் ஒரு மாத காலத்திற்கு இலவச விசாக்களை வழங்கி, மனிதாபிமானப் பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் கடல்சார் சட்ட விதிகளைப் பின்பற்றி, அணிசேரா கொள்கையின் அடிப்படையில் ஈரான் மாலுமிகள் தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தீர்மானங்கள் மூலம் எந்தவொரு தரப்புக்கும் ஆதரவளிப்பதோ அல்லது எவருக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதோ அரசாங்கத்தின் நோக்கமல்ல என அவர் குறிப்பிட்டார்.

உலகளாவிய ரீதியில் போர்ச் சூ ழல்கள் நிலவினாலும், அதன் மறைமுகத் தாக்கங்களுக்கு மத்தியில் தேசிய பாதுகாப்பிற்கே அரசாங்கம் முதலிடம் வழங்கும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பு மற்றும் மக்களின் பாதுகாப்பு குறித்து மிகுந்த அவதானத்துடன் செயற்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# யூத எதிர்ப்பு நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பு

கனடாவில் யூதர்களின் வழிபாட்டு தலங்களை குறிவைத்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவங்களை கனடா பொது பாதுகாப்பு அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி கடுமையாக கண்டித்துள்ளார். அண்மையில் டொராண்டோ பெரும்பாக பகுதியில் உள்ள பல யூத வழிபாட்டுதலங்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவங்கள், யூத விரோத வன்முறைகள் அதிகரித்து வருவதற்கான கவலைக்கிடமான அடையாளமாக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.



இந்தச் சம்பவத்தை மிகக் கடுமையாக நான் கண்டிக்கிறேன் எனவும் இது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். யூத விரோதம் வன்முறையாக மாறும் நிலை கனடாவின் வழி அல்ல. இதை எங்களால் சகிக்க முடியாது இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.

மேலும் வெறுப்பு குற்றங்களை தடுக்கும் நடவடிக்கைகளில் காவல்துறையுடன் மற்றும் பிற அரசாங்க நிலைகளுடன் கூட்டாக மத்திய அரசு தொடர்ந்து செயல்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவில் வாழும் ஒவ்வொரு யூத குடிமகனும் பாகுபாடு மற்றும் யூத விரோதத்திலிருந்து விடுபட்டு பாதுகாப்பாக வாழ உரிமை பெற்றவர்கள். ஒரு வழிபாட்டுத் தலங்களை தாக்குவது என்பது கனடாவையே தாக்குவதற்கு சமம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிலையில், டொராண்டோ மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் இடம்பெற்ற இந்த தாக்குதல்கள் குறித்து காவல்துறையினர் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளதுடன், யூத சமுதாயப் பகுதிகளில் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# கனடா தம்பதி கொண்டு சென்ற 32 கோடி ரூபா போதைப்பொருளுடன் கட்டுநாயக்கா விமானத்தில் கைது!




கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்குப் பெருந்தொகையான 'குஷ்' போதைப்பொருளைக் கடத்தி வந்த கனடா நாட்டுத் தம்பதியினர் சுங்கப் பிரிவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கனடாவின் அல்பர்ட்டா பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய கணவன் மற்றும் 29 வயதுடைய மனைவி என தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 23 பொதிகளில் அடைக்கப்பட்டு இரண்டு பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 32 கோடி ரூபா பெறுமதியான 32 கிலோ கிராம் 159 கிராம் எடையுடைய 'குஷ்' போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன் சர்வதேச சந்தைப் பெறுமதி சுமார் 32 கோடியே 15 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. குறித்த நபர் கனடாவில் தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்றில் பணி புரிபவர் என்பதும், அவரது மனைவி தொழில் தேடும் நிலையில் உள்ளவர் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. 10 மார்ச் 2026 செவ்வாய்க் கிழமை காலை 10.45 மணியளவில் தாய்லாந்தின் பெங்கொக் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான யூ .எல்-403 என்ற விமானத்தின் ஊடாக இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். சந்தேக நபர்களும் மீட்கப்பட்ட போதைப்பொருட்களும் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# பல்துருவ உலகம் என்ற மாயை

கடந்த வருடம் உலகின் பல்வேறு பிராந்தியங்களில் எட்டுப் போர்களை நிறுத்தியதற்காக தனக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று கேட்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப் எட்டு மாத காலத்திற்குள் இரண்டாவது தடவையாக இஸ்ரேலுடன் சேர்ந்து மத்திய கிழக்கில் ஈரான் மீது விமானக்குண்டுத் தாக்குதல்களை நடத்தத் தொடக்கியிருக்கிறார்.

இந்த தாக்குதல்களை நடத்துவதற்கான திட்டத்தை அமெரிக்காவும் இஸ்ரேலும் பல மாதங்களாக தீட்டி வந்திருக்கின்றன என்பதை தாக்குதல்களின் இலக்குகளையும் பாணியையும் நோக்கும் போது தெரிகிறது.

ஆனால் தாக்குதல்களை தொடங்குவதற்கு தெரிந்தெடுத்த தருணம் பல கேள்விகளை எழுப்புகிறது. ஈரானின் அணுத்திட்டம் தொடர்பில் வாஷிங்டனுக்கும் தெஹ்ரானுக்கும் இடையில் ஆறாவது சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பிக்கபடவிருந்த நிலையில் கடந்த வருடம் ஜீனில் முதலில் இஸ்ரேலும் பிறகு அமெரிக்காவும் ஈரானிய இலக்குகள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

இப்போது ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் இரண்டாவது பேச்சுவார்த்தை செயன்முறை முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் முன்னரைப் போன்றே இஸ்ரேலுடன் சேர்ந்து அமெரிக்கா தாக்குதல்களை தொடங்கியிருக்கிறது.

ஈரானின் அணுத்திட்டம் தொடர்பிலான பேச்சுக்களை முன்னெடுப்பதில் டொனால்ட் ட்ரம்புக்கு அக்கறையில்லை என்பது இரண்டாவது தடவையாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஈரானில் ஆட்சி மாற்றத்தை செய்வதே ட்ரம்பின் நோக்கம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

பதிலடியாக, அரபு நாடுகளில் இருக்கும் அமெரிக்கத் தளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தத் தொடக்கியிருக்கிறது. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பரந்தளவில் போர் மூளக் கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இராஜதந்திர முயற்சிகளை முன்னெடுத்துக் கொண்டே அதேவேளை குண்டுத் தாக்குதல்களை இஸ்ரேலுடன் சேர்ந்து நடத்தும் ட்ரம்பை எந்தவொரு சமாதான முயற்சியிலும் ,னிமேல் உலகத்தினால் நம்பமுடியாது. அதேவேளை, அமெரிக்காவையோ அல்லது இஸ்ரேலையோ கட்டுப்படுத்தக் கூடிய சக்தி உலகத்தில் எந்த நாட்டிடமே இல்லை என்பதே இன்றைய சர்வதேச யதார்த்தம்.

தாங்கள் விரும்பிய நேரத்தில் நாடுகள் மீது தாக்குதல்களை தொடுக்க ட்ரம்பினாலும் ,ஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகுவினாலும் இயலமாக இருக்கிறது. தாக்குதல்களை தொடுப்பதும் நிறுத்துவதும் அவர்களின் விருப்பப்படியே நடக்கிறது. இன்றைய உலகம் பல்வேறு பலம் பொருந்திய நாடுகளைக் கொண்டதாக அதாவது பல்துருவமயமானதாக இருக்கிறது என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். அதாவது சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்னரான காலப்பகுதியில் தோன்றிய அமெரிக்காவின் தனி ஆதிக்கத்திலான ஒருதுருவமய ஒழுங்கு இனிமேலும் இல்லை என்று ஒரு மாயையில் வாழ்ந்து கொண்டிருந்தோம். ஆனால், டொனால்ட் ட்ரம்ப் சர்வதேச சட்டங் களைப் பற்றி தனக்கு கவலையில்லை என்று வெளிப்படையாகவே கூறிக் கொண்டு செய்து வரும் சர்வதேச காடைத்தனம் உலகம் இப் போதும் ஒரு துருவமயமானதாகவே நடைமுறையில் இருக்கிறது என்பதை நிரூபிக்கிறது.

# நயினாதீவில் பூசாரி வெட்டிக்கொலை

நயினாதீவில் இரு பூசாரிகளுக்கிடையே ஏற்பட்ட வாய்த் தகராறு வாள் வெட்டில் முடிந்ததில் ஒருவர் பலியானார். குறித்த சம்பவம் 09 மார்ச் 2026 மாலை நயினாதீவில் இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவம் குறித்து தெரியவருகையில் நயினாதிவு வீரகத்தி வினாயகர் ஆலய பூசகருக்கும் நயினாதீவில் ஏனைய சிறு கோயில்களுக்கு தொழில் நிமித்தம் சென்றிருந்த பூசகர் ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட தொழில் தகராறே குறித்த கொலையில் முடிந்ததாக தெரிய வருகின்றது. இந்த சம்பவத்தில் நயினாதீவு வீரகத்தி விநாயகர் ஆலய பூசகரது வாள் வெட்டிலேயே குறித்த பூசாரி பலியானார் என கூறப்படுகின்றது. நயினாதீவில் நடைபெற்ற இச்சம்பவமானது வெளிஊர் பக்தர்கள் மனதில் நாகபூஷணி அம்பாள் கோவிலில் ஏற்பட்ட தாகவே நினைக்கப்படுபவது மிகவும் தவறானது. அம்பாள் கோவில் பூசகர்களாக இருக்கும் நயினாதீவு பரம்பரைக் குருமார்களோ அல்லது மகோஸ்சவக் குருமார்களோடு இச் சம்பவம் எந்தவொரு தொடர்பும் இல்லை. சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஈரானிய கால்பந்து வீராங்கனைகளுக்கு அவுஸ்திரேலியாவில் அடைக்கலம்



ஆசியக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்பதற்காக அவுஸ்திரேலியா சென்றிருந்த ஈரானியப் பெண்கள் உதைபந்தாட்ட அணியின் ஐந்து வீராங்கனைகளுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது.

போட்டியின் ஆரம்பத்தில் ஈரானிய தேசிய கீதத்தைப் பாட மறுத்தமைக்காக, நாடு திரும்பினால் அவர்கள் கொல்லப்படலாம் அல்லது கடும் தண்டனைக்குள்ளாகலாம் என்ற அச்சத்திற்கு மத்தியிலேயே இந்த மனிதாபிமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டோனி பர்க் திங்கட்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், ஸஹ்ரா கன்பரி (அணித்தலைவி), பாத்திமா பசந்திதே, ஸஹ்ரா சர்பாலி அலிஷா, மோனா ஹமூதி, அத்தீபே ரம்ஸானிசாதே ஆகிய ஐந்து வீராங்கனைகளுக்கு வீசா வழங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தினார்.

'நீங்கள் அவுஸ்திரேலியாவில் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் இது உங்கள் வீடு போன்றது' என அமைச்சர் அவர்களுக்குத் தைரியம் ஊட்டியுள்ளார்.

ஈரான் மீது போர் தொடுத்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்த வீராங்கனைகளின் பாதுகாப்பு தொடர்பில் அவுஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பானீஸ் உடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

ஐந்து பேர் ஏற்கனவே பாதுகாக்கப்பட்டனர், எஞ்சியோர் வழியில் உள்ளனர். அவர்களை ஈரானுக்குத் திருப்பி அனுப்புவது பாரிய மனிதாபிமானத் தவறாக அமையும். அங்கு அவர்கள் கொல்லப்பட அதிக வாய்ப்புள்ளது' என ட்ரம்ப் தனது 'ட்ரூத் சோஷியல்' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தென் கொரியாவுக்கு எதிரான போட்டியின் போது தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது, ஈரானிய வீராங்கனைகள் மௌனமாக நின்றதை ஈரானிய அரச ஊடகம் 'கௌரவமற்ற செயல்' என விமர்சித்திருந்தது. அத்துடன், அவர்கள் 'யுத்த கால துரோகிகள்' என முத்திரை குத்தப்பட்டதால், நாடு திரும்பினால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என மனித உரிமை அமைப்புகள் எச்சரித்திருந்தன.

தற்போது ஏனைய வீராங்கனைகளும் அவுஸ்திரேலியப் பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ள போதிலும், ஈரானில் உள்ள தமது குடும்பத்தினரின் பாதுகாப்புக் கருதி சிலர் நாடு திரும்ப யோசித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன..

## சுரேஷ் சலேவை பாதுகாக்க சி.ஐ.டி முன் விமல் சத்தியாக்கிரகம்?



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சலேவை சிறைக் கூண்டுக்குள் வைத்து கொலை செய்வதற்கு முயற்சிக்கப்படுகிறது. சுரேஷ் சலேவை பாதுகாப்பதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்பாக சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட தயாராகவுள்ளோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் 11 மார்ச் 2026 புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அரசியல் பழிவாங்களுக்காகவே அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சலே கைது செய்யப்பட்டு துப்பரவு இல்லாத சிறைக்கூண்டில் அவரை அடைத்து வைத்துள்ளார்கள்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சுரேஷ் சலே தொடர்பில் நீதிமன்றத்துக்கு இது வரையில் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் எலிகள் ஓடித் திரியும் சிறைக் கூண்டில் இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சுகாதார வசதியற்ற மலசலக்கூடத்துக்கு அருகில் சலேவை வைத்திருப்பதால் அவர் நோயாளியாக்கப்படுவார். சிறைக்கூண்டில் வைத்தவாறு அவரை கொலை செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. அரசாங்கத்தின் இந்த முறையற்ற செயற்பாட்டுக்கு இடமளிக்க முடியாது. சுரேஷ் சலேவை பாதுகாப்பதற்கு கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்பாக சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தயாராகவுள்ளோம். மக்கள் அனைவரும் இந்த போராட்டத்தில் கலந்துக் கொள்ள வேண்டும் என்றார்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

ஒரு வாரமாக சுரேஸ் சாலேயுக்காக குரல் கொடுத்த பருவ கால பட்சிகள் இப்போது மத்திய கிழக்குப் போரின் பக்கம் பறந்து விட்டன. ஈரானின் போர்க்கப்பலை இலங்கைக் கடல்

ரென்று நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

சுரேஸ் சாலேயை மிகவும் நெருக்கமாக கண் காணிக்க அனுமதிக்குமாறு

குளிர் காய்ந்து அரசியல் லாபம் பெறலாமென முயன்றவர்கள் அது பயனளிக்கப் போவதில்லையென்று தெரிந்தவுடன் இப்போது தமது செயற்

கேலிச்சித்திரத்தில் அமெரிக்கா கண்டு பிடித்த ஈராக்கின் இரசாயனக் குண்டு சதாம் ஹுசேன் என்று கீறியிருந்தது.

ஈரான் அதிபர் கொல்லப்பட்ட பின்னரும் அமெரிக்கா முன்னெடுத்திருக்கும் போர் தொடருகிறது. உக்ரைன் மீது ரஸ்யா நடத்திக் கொண்டிருக்கும் போரின் அவலக் காட்சிகளை இங்கு ஒவ்வொரு நிமிடமும் காணக் கூடியதாகவிருக்கிறது.

மத்திய கிழக்கில் குண்டுகள் வெடித்துக் கொண்டிருக்கையில் இலங்கையின் தென்பகுதியில் சுமார் 22 மைல் கடல் எல்லைக்கப்பால் சர்வதேச கடற்பரப்பில் ஈரானுக்குச் சொந்தமான கடற்படைக் கப்பல் ஒன்று தாக்குதலுக்குள்ளானது. அக்கப்பலில் இருந்த 160 கடற்படையைச் சார்ந்தவர்கள் அரைவாசிக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஐ.ஆர்.ஐ. எஸ். டேனா என்ற ஈரானிய போர்க்கப்பலை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று தாக்கி அழித்ததாக அறிவிக்கப்பட்டது. இதில் காயங்களுடன் மீட்கப்பட்ட ஈரானியப் படையினர் இலங்கை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஈரானிய போர்க்கப்பல் எவ்வாறு இலங்கையை அண்மித்த கடலில் வந்தது. அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் எவ்வாறு அடையாளம் கண்டது. ஈரானிய கப்பலை கடல் எல்லை



எல்லையில் அமெரிக்கா தாக்கியதை அநுர அரசு எவ்வாறு பார்க்கிறது?

அரசியல்வாதிகளை பருவகால பட்சிகள் என்று பொதுவாகக் கூறுவார்கள். அவ்வப்போது எது எது கண்ணில் முக்கியமாகப்படுகிறதோ அதனை முன்னிலைப்படுத்தி செயற்படுவதை

நீதிமன்றத்திடம் இந்த மனு ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாக சம்பங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், சுரேஸ் சாலேக்காக முன்னர் குரல் கொடுத்தவர்கள் காணாமல் போய் விட்டார்கள். ரணில் விக்கிரமசிங்க

பாடுகளை புதிய திசைக்கு திருப்பியுள்ளனர். இது மத்திய கிழக்கு போர்.

இதுவே இப்போது பெரிதாக பேசுபொருளாக இவர்களுக்குக் கிடைத்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இஸ்ரேலையும் இணைத்துக்

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

க்குள் அனுமதிக்க இந்தியா மறுத்ததா. இவ்வாறு பல கேள்விகள் இலங்கை அரசியலில் எழுந்துள்ளன.

# அணிசேரா நாடுகளுக்கு தலைமையேற்ற நாடு மத்திய கிழக்குப் போரில் எந்தப் பக்கம் நிற்கிறது?

இது குறிக்கும். இதில் இலங்கை அரசியல்வாதிகள் இனமத பேதமின்றி ஒரு முகப்பட்டவர்கள். அவ்வப்போது திடீரென வாகனங்கள் சுழன்று திரும்புவது போல இவர்களுடைய செயற்பாடுகள் அமைந்திருக்கும். கடந்த வாரம் இடம்பெற்ற முக்கிய விடயத்தை மறந்து இந்த வாரத்தில் இன்னொரு விடயத்துக்குள் தம்மைப் புகுத்தி விடுவார்கள்.

இதற்கு நல்லதொரு உதாரணமாக, கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் குற்றத்தடுப்பு திணைக்கள முன்னாள் பணிப்பாளர் சுரேஸ் சாலேயின் விடயத்தைப் பார்க்கலாம். இவர் கைதானதை தூக்கிப் பிடித்து குய்யோ முறையோ என்று கத்தியவர்களின் குரலை இப்போது காணவில்லை.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சரத் வீரசேகர ஆகிய சிங்கள தேசிய நாயகர்கள், சுரேஸ் சாலே கைதான விடயத்தில் என்னென்ன சொன்னார்கள்? இந்த விடயத்தை முன் வைத்து நாட்டை முடக்கப் போவது போன்று பேசித் தள்ளினார்கள். குற்றத்தடுப்பு திணைக்களத்தை முற்றுகையிடுவார்கள் போன்று இவர்களது வீரவசனங்கள் அமைந்திருந்தன.

கடந்த மாதம் 25ம் திகதி தனியார் பணியகம் ஒன்றில் வேலைக்குச் சென்று கொண்டிருக்கையில் பேலியகொட என்ற இடத்தில் வைத்து சுரேஸ் சாலே கைது செய்யப்பட்டார். தொடர்ந்து 90 நாட்கள் குற்றத்தடுப்பு திணைக்களத்தில் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதித்தது.

இதன் அடுத்த கட்டமாக, 2019 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணையில் இவர் மூன்றாவது சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ளா

கைதான போது குற்றத்தடுப்பு திணைக்களத்தை முற்றுகையிட்டது போன்று சுரேஸ் சாலே விடயத்திலும் இடம்பெறலாமென எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது. இவரது கைது தொடர்பாக இரண்டு மனுக்கள் தாக்கலாகியுள்ளன. ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரியொருவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சுரேஸ் சாலேயின் தடுப்புக்காவல் தொடர்பாக அவரது மனைவி மற்றொரு மனுவை சமர்ப்பித்துள்ளார். திணைக்கள தடுப்புக்காவலில் அவரை பார்வையிடவும், வீட்டிலிருந்து உணவு கொண்டு சென்று வழங்கவும், வழக்கறிஞர்கள் அவரைச் சந்தித்து கலந்துரையாடவும் தற்போதுள்ள தடைகளை நீக்க வேண்டுமென இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுக்கள் கையளிக்கப்படும் முன்னர் சுரேஸ் சாலேக்காக முன்னின்ற ஒருவரையும் காணவில்லை. பிள்ளையான் கைது செய்யப்பட்டபோது அவரை தடுப்பு காவலில் சந்திப்பதற்கு தம்மை ஒரு வழக்கறிஞராக அடையாளப்படுத்திய உதய கம்மன்பில எங்கே என்று தெரியவில்லை. இன்னும் சில நாட்களுக்கு சுரேஸ் சாலே தடுத்து வைக்கப்படுவாரானால் ரணிலும் மற்றைய அரசியல்வாதிகளும் செய்தது போல இவரும் திடீர் நோயாளியாகி சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்படக்கூடும். அது தானே வழமையான நடைமுறை.

இவரது கைதை இனவாத செயலாக ஊதிப்பெருப்பித்து, அதன் மூலம்

கொண்டு ஈரான் மீது தாக்குதலை ஆரம்பித்து ஒரு வாரமாகிறது. மூன்றாவது உலக யுத்தத்தின் ஆரம்பமாக இது இருக்குமென பலரும் விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர். ஈரானின் அதியுயர் தலைவர் கொமனி கொல்லப்பட்டுள்ளார். அடுத்தடுத்த தலைவர்கள் போரைக் கொண்டு நடத்துகிறார்கள். மத்திய கிழக்கு பிராந்திய நாடுகள் அனைத்தும் யுத்த மேகத்தால் சூழப்பட்டுள்ளன. கொல்லப்பட்டோர் தொகை, போரின் உண்மையான நிலை ஆகியவற்றை சரியான தகவல்களை முழுமையாக அறிய முடியாத நிலையில் போர் தொடங்கியுள்ளது.

ஒரு குறிப்பிட்ட இலக்குடன் போர் இடம் பெறுவதாகச் சொன்னாலும் இதன் பாதிப்பு உலகு முழுவதுக்குமானது. எண்ணெய் விலை, தங்கத்தின் விலை மட்டுமன்றி நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துமே ஏறிக் கொண்டு போகிறது. போர் மேலும் சில வாரங்கள் தொடருமானால் சில நாடுகளில் பட்டினிப் போர் காணப்படும். போரில் வெல்பவர்கள் யார் என்பதை விட இதன் பாதிப்பு முழு உலகுக்குமானது என்பதே யதார்த்தம். இதனையிட்டு எவரும் கவலைப்படுவதாக இல்லை.

2003ல் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புக்ஷ் ஈராக் மீது ஆரம்பித்த யுத்தத்தை ட்ரம்பின் ஈரான் மீதான யுத்தம் நினைவூட்டுகிறது. அன்று அமெரிக்கா ஈராக்கில் இரசாயன குண்டு இருப்பதாகக் கூறிக் கொண்டு யுத்தத்தை நடத்தியது. ஆனால் இது வரை அது கண்டு பிடிக்கப்படவில்லை. உண்மையில் அந்தப் போரின் இலக்கு ஈராக் அதிபர் சதாம் ஹுசேனாக இருந்தது. இதுபற்றி தமிழ்நாட்டு சஞ்சிகை ஒன்று கீறிய

இலங்கையின் பாதுகாப்பு வலயத்தில் ஈரானிய கப்பல் மீது எவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது என்று பொதுஜன பெரமுன எம்.பி. நாமல் ராஜபக்ச கேள்வி கேட்டுள்ளார்.

அதேவேளை, ஈரானிய போர்வீரர்களை இந்தியா கேவலமாக நடத்தியுள்ளதென பெரமுனவின் இன்னொரு எம்.பி.யான சாமர சம்பத் இந்தியாவை சாடியுள்ளார்.

தாக்கி அழிக்கப்பட்ட கப்பல் யாருடையது, யார் அழித்தார்கள் என்பது எமக்குத் தெரியாது. தாக்குதலுக்கு உள்ளான தகவல் கிடைத்ததும் மனிதாபிமான அடிப்படையில் தங்கள் அரசு செயற்பட்டது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார். இலங்கைக்குள் வந்த ஈரானிய கப்பலில் வந்தவர்களுக்கு கொழும்பில் அடைக்கலம் கொடுத்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமர பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

1970களில் அணிசேரா நாடுகளுக்கு தலைமை தாங்கிய இலங்கையின் கொள்கையிலேயே இலங்கை இருப்பது போன்ற காட்சி ஆளும் தரப்பினரின் கூற்றுகள் ஊடாக தெரிய வருகிறது. உண்மையிலேயே இது அணிசேரா கொள்கையா அல்லது நடுநிலைமையா என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆனால், ஈரானுக்கு ஆதரவான கருத்துகள் இலங்கை அரசியல் கட்சிகளிடையே பரவப்பட்டு வருகிறது. கொல்லப்பட்ட ஈரானின் அதிபருக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் உட்பட பல அரசியல் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ஆனால், தமிழர் தேசிய அரசியலும் அவர்களின் தலைவர்களின் போக்கும் என்னவென்று தெரியவில்லை. மத்திய கிழக்கில் போர் ஆரம்பமாகி விட்டது என்பதே தெரியாதது போல பாசாங்கு பண்ணிக் கொண்டிருப்பது ஏன். எங்கு போர் நடந்தாலும் முதலில் பலியாவது அப்பாவிப் பொதுமக்களே என்பது கூடவா தெரியவில்லை.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

07 மார்ச் 2026 முதல் 13 மார்ச் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பேரின்பராணி தவரத்தினம்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பேரின்பராணி தவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாள் 02 மார்ச் 2026 திங்கட் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் செஞ்சோலை இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பேரின்பராணி தவரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி பத்மாவதி துரைச்சாமி

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களது 31ம்நாள் நினைவுநாள் 06 மார்ச் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் செஞ்சோலை இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடுவாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துஷியந்தி நவநாதன்

யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 04 மார்ச் 2026 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நடராஜா சிதம்பரநாதன்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா சிதம்பரநாதன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 10 மார்ச் 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நடராஜா சிதம்பரநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம்

வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவு தினம் 05 மார்ச் 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 38வது ஆண்டு நினைவஞ்சலி



### சங்கீதபூஷணம் இசை ஆசிரியர்
### திரு நாகலிங்கம் சண்முகலிங்கம்

புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம், இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 38வது ஆண்டு நினைவு நாள் 07 மார்ச் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



27 பெப் 2026 வெள்ளிக்கிழமை நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி தனபாலசிங்கம் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



02 மார்ச் 2026 திங்கட்கிழமை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பேரின்பராணி தவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



02 மார்ச் 2026 திங்கட்கிழமை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பேரின்பராணி தவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



02 மார்ச் 2026 திங்கட்கிழமை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பேரின்பராணி தவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



04 மார்ச் 2026 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



04 மார்ச் 2026 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



04 மார்ச் 2026 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



05 மார்ச் 2026 வியாழக்கிழமை வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



07 மார்ச் 2026 சனிக்கிழமை புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம் - இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 38வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



08 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி சியாமி சிவா அவர்களின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சியாமி சிவா அவர்கள் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



08 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளுன் செல்வப்புதல்வி ஸ்ரீதேவி ஸ்ரீகுமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஸ்ரீதேவி தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



10 மார்ச் 2026 செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா சிதம்பரநாதன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# இந்தியக் கொடியுடன் எரிபொருள் ஏற்ற ஈரான் அனுமதி! இலங்கை, பங்காளதேஷ், மாலைதீவுக்கு இந்தியா விநியோகம்?



இலங்கை, பங்களாதேஸ் மற்றும் மாலைதீவு உள்ளிட்ட அண்டை நாடுகளின் டீசல் விநியோக கோரிக்கைகளை இந்தியா பரிசீலித்து வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்களின் முக்கிய ஏற்றுமதியாளராக உள்ளது, குறிப்பாக அதன் அண்டை நாடுகளுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்கிறது .ஏற்கனவே பங்களாதேஸ் டீசல் விநியோகத்தைக் கோரியுள்ளதாகவும், கூறப்படுகின்றது.

இதனிடையே இந்தியக் கொடியுடன் எரிபொருள் ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு ஹர்முஸ் நீரிணை ஊடாக பயணிப்பதற்கு ஈரான் அனுமதி வழங்கியுள்ளதாக சர்வதேச செய்தி ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சகமும், டில்லியில் உள்ள ஈரானிய தூதரகமும் விடயம் தொடர்பில் மௌனம் காத்து வருகின்றன.

ஏற்கனவே மேற்கு இந்தியாவில் உள்ள காண்ட்லா துறைமுகத்திற்குச் சென்ற தாய்லாந்து கப்பல் நேற்று புதன்கிழமை ஹர்முஸ் நீரிணைப் பகுதியில் தாக்கப்பட்டது. தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டம் தெரிவித்திருந்தது. இந்நிலையிலேயே இந்தியக் கொடியுடன் எரிபொருள் ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு ஈரான் அனுமதி வழங்கியுள்ளதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க ஈராக்கிய கடல் பகுதியில் இரண்டு வெளிநாட்டு எண்ணெய் டேங்கர்களைத் தாக்கி, எரிசக்தி விநியோகங்கள் மீதான பழி வாங்கும் தாக்குதல்களை ஈரான் அதிகரித்துள்ளது.


பாரசீக வளைகுடாவில் மற்றொரு கப்பல் தாக்கப்பட்டதாக இங்கிலாந்து கடல்சார் நிறுவனம் தெரிவித்துள்ளது. இது கடந்த இரண்டு நாட்களில் ஆறாவது கப்பல் மீதான தாக்குதலாகும்.

இதேவேளை மேததல் நிலை தொடரும் நிலையில் சர்வதேச சந்தையில் இன்று எண்ணெய் விலை மீண்டும் 100 அமெரிக்க டொலர்களை எட்டியது.

சர்வதேச எரிசக்தி நிறுவனம் உலக சந்தையில் இருப்புக்களில் இருந்து சாதனை அளவில் 400 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெயை வெளியிட ஒப்புக்கொண்ட போதிலும் இந்த உயர்வு ஏற்பட்டது. இதனிடையே, மோதல்கள் விரிவடைந்து வரும் நிலையில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்கா போரில் வெற்றி பெற்றதாக தனது கூற்றை மீண்டும் மீண்டும் கூறி வருகிறார்.

# சுவிஸ் பஸ் தீ விபத்தில் இணுவில் இளைஞரும் பலி!

சுவிட்சர்லாந்தில் பேருந்தில் தீ பரவி ஏற்பட்ட விபத்தில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இளைஞன் ஒருவரும் உயிரிழந்துள்ளார். இந்த விடயத்தை, உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள், உறுதிப்படுத்தியுள்ளனர்.



விபத்தில் உயிரிழந்த 5 பேரில், யாழ்ப்பாணம் இணுவில் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்ட, 30 வயதான தினேஸ் என்ற இளைஞனும் அடங்கியுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சுவிட்சர்லாந்து ஜனாதிபதி, உயிரிழந்தவர்களுக்கான இறுதி அஞ்சலியைச் செலுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த சம்பவம், விபத்தா, அல்லது பயங்கரவாத தாக்குதலா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பேருந்தில் பயணித்த ஒருவர் தனக்கு தானே தீ மூட்டிக் கொண்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இதன்போது, 6 பேர் உயிரிழந்துள்ளதுடன், 5 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agenyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# அமெரிக்காவிடம் சுயாதீனத்தை இழந்த இலங்கை!

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஈரானின் உயர் தலைவர் ஆயத்துல்லா அலி கமேனி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் உலகை அதிர்ச்சியை ஆழ்த்தியதுடன், பரவலான அச்சத்தையும் தோற்றுவித்திருக்கிறது.

ஈரானின் அணுசக்தி ஆற்றலை அளிப்பதற்காக என்ற பெயரில் முன்னர் தொடங்



கப்பட்ட இராணுவ நடவடிக்கை, ஆட்சி மாற்ற நடவடிக்கையாக, ஈரானின் தலைமைத்துவத்தை அழிக்கும் நடவடிக்கையாக மாற்றப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் இந்த நடவடிக்கையை உலகம் பெரும்பாலும் வேடிக்கை பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்றைய இந்த நிலை, நாளை தங்களுக்கும் கூட ஏற்படலாம் என்பதை பல நாடுகள் மறந்து விட்டிருக்கின்றன.

தனக்குப் பிடிக்காத அரசாங்கங்களை கவிழ்க்கும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் போக்கை விமர்சித்திருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இது இலங்கைக்கும் கூட ஆபத்தானது எனக் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் சரியான கருத்து.

அமெரிக்காவை எதிர்க்கின்ற நாடுகளின் தலைவர்களுக்கு எதுவும் நடக்கலாம் என்ற நிலையே இன்று ஏற்பட்டிருக்கிறது. மத்திய கிழக்கில், முதலில் ஹமாஸ் தலைவர்கள் அழிக்கப்பட்டார்கள், அடுத்து ஹிஸ்புல்லா தலைவர்கள் அழிக்கப்பட்டார்கள்.

சிரியாவின் பஷார் அல் அசாத் குறிவைக்கப்பட்ட போது அவர் கடைசி நேரத்தில் தப்பிச் சென்று விட்டார். இப்போது ஈரானின் உயர்தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அமெரிக்கா தன்னை எதிர்க்கின்ற நாடுகளின் தலைமையை இல்லாதொழிக்கின்ற நடவடிக்கையை ஈவிரக்கமின்றி மேற்கொண்டு வந்திருக்கிறது.

சில இடங்களில் நேரடியாகவும் சில இடங்களில் இஸ்ரேலை கொண்டும் அதை நிகழ்த்தியிருக்கிறது. ஈராக்கிடம் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக கூறி போர் தொடுத்து சதாம் ஹுசைனைப் பிடித்து தூக்கிலிட்டது. லிபியாவில் அதேபோன்று கேணல் முவம்மர் கடாபி கொல்லப்பட்டார்.

அதே வரிசையில் இப்பொழுது ஈரானிய உயர்தலைவர் மற்றும் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அண்மையில் வெனிசுவேலாவிலும் கூட அமெரிக்க படைகள் தரையிறங்கி அந்த நாட்டின் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவை சிறை பிடித்து சென்ற போது உலகம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

ஆக மொத்தத்தில், அமெரிக்காவை எதிர்க்கின்ற நாடுகளின் தலைவர்களின் கதி இது தான் என்ற நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இது ஓர் எழுதப்படாத விதியாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையில் இலங்கையின் நடுநிலை தொடர்பாக கேள்விகள் எழுந்திருக்கின்றன.

ஒரு நாட்டின் தலைவரின் மறைவுக்கு அதனுடன் நெருங்கிய உறவு பேணும் நாடுகள் இரங்கல் தெரிவிப்பது வழக்கம். நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவிப்பதுடன், இறுதிச் சடங்கிலும் பங்கேற்பதும் வழமையானது.

இலங்கையும் அவ்வாறான பாரம்பரியத்தையே பின்பற்றி வந்தாலும், ஈரானின் உயர் தலைவர் கமேனி படுகொலை விடயத்தில் அதற்கு மாறாகவே செயற்பட்டுள்ளது. இந்தப் படுகொலை நடந்து, 5 நாட்களாக இலங்கை அரசாங்கமோ அரசாங்க தலைவர்களோ வாய் திறக்க முடியாதளவுக்கு திராணியற்றவர்களாக மாறியிருந்தனர்.

இங்கு கொல்லப்பட்டவர் யார் என்பது முக்கியமானதாக இருக்கவில்லை, யாரால் கொல்லப்பட்டார் என்பதே முக்கியமானதாக இருந்தது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலினால் படுகொலை செய்யப்பட்டதால் தான், இலங்கை மட்டுமல்ல இந்தியாவும் கூட அமைதியாக இருக்கிறது. அண்மையில் வெனிசுவேலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட போது, அமெரிக்காவின் பெயரை குறிப்பிடாமல் அரசாங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டது. ஆனால், ஈரான் நிலவரம் தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு முதலில் வெளியிட்ட அறிக்கையில் அனைத்து தரப்புக்களும் அமைதியை கடைப் பிடிக்க வேண்டும், பதற்றத்தை தணிக்க வேண்டும், உலகளாவிய மோதல்களை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக இருந்ததே தவிர, யாரையும் கண்டிக்கும் வகையில் கருத்துக்கள் வெளியிடப்படவில்லை.

அதை விட ஈரானின் உயர்தலைவர் கொல்லப்பட்டமை தொடர்பாகவோ, குறைந்த பட்சம் அதற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலோ அந்த அறிக்கையில் எதுவுமே இடம் பெற்றிருக்கவில்லை.

இந்தளவுக்கும் ஈரான் இலங்கையில் மிக நெருங்கிய நட்பு நாடுகளில் ஒன்று. இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் முக்கியமான பங்கு வகிக்கும் நாடு. முன்னர் ஈரானிடம் இருந்தே, இலங்கை எரிபொருளை கொள்வனவு செய்து வந்தது.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை கட்டிக் கொடுத்ததும் ஈரான் தான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட உமா ஓயா திட்டத்துக்கு நிதியளித்ததும் ஈரானே. ஈரானை சர்வதேச கூட்டாளியாக இலங்கை எப்போதும் கருதி வந்தது.

சர்வதேச அரங்கில் கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட போதெல்லாம், இலங்கைக்கு ஈரான் ஆதரவளித்து வந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்கும் ஈரான் ஆதரவு வழங்கியதுடன், ராஜபக் ஷ அரசாங்கம் ஈரானுடன் மிக நெருங்கிய நட்பு பாராட்டி வந்தது.

ஈரானின் முன்னாள் ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநெஜாத் விமான தாக்குதலில் கொல்லப்பட்டதாக தகவல் வெளியானதும், நாமல் ராஜபக்ஷ மாத்திரமே, அவர் ஒரு இலங்கையின் மிக நெருங்கிய கூட்டாளி என குறிப்பிட்டு கண்டனம் தெரிவித்திருந்தார். ஈரானை உண்மையான நண்பன் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இலங்கை அரசாங்கம் இந்த விவகாரத்தில் அதிகபட்ச பொறுமையைக் கடைப்பிடிக்கிறது. ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் மீது கடு



மையான வரிகள் விதிக்கப்படும் என ட்ரம்ப் அறிவித்த பின்னரும் கூட, ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதி தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆனாலும், இலங்கையின் நெருங்கிய ஒரு கூட்டாளி மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தாக்குதல் நடத்துகின்ற போது, இலங்கை அமைதியைக் கடைப்பிடிப்பது, இராஜதந்திர மட்டங்களில் வியப்பை தோற்றுவித்துள்ளது.

கமேனியின் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்காவிட்டாலும், மரியாதை நிமித்தமாக இரங்கலையாவது வெளியிட்டிருக்க வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இருந்தது.

நடுநிலை நாடாக காட்டிக் கொண்டாலும் அமெரிக்கா அல்லது இஸ்ரேலை பகைத்துக் கொள்ள இலங்கை விரும்பவில்லை என்பது வெளிப்படையாக தெரிகிறது. இந்தச் சூழலில் ஈரானுக்கு ஆதரவாக வெளியிடப்படும் கருத்துக்கள் அமெரிக்காவை சீற்றத்துக்கு உள்ளாக்கும் என்ற பயம் இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கிறது .

ட்ரம்ப் அரசாங்கத்துடன் மிக அவதானமாகவே இருக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. இலங்கை மீது அமெரிக்காவின் முழுக்கவனம் குவிந்திருக்கிறது. இலங்கையை தனது தேவைக்காக பயன்படுத்துவதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறது.

அதனால் இலங்கைக்கு தேவையான பல வளங்களை கொடுத்து அதனை தன் கைக்குள் போட்டுக் கொள்கிறது. அமெரிக்காவைப் பகைக்கும் வகையில் எடுக்கின்ற எந்த ஒரு நடவடிக்கையும் அரசாங்கத்தை உறுதியற்ற நிலைக்குத் தள்ளலாம் என்ற அச்சம் தற்போதைய ஆட்சியாளர்களிடம் இருப்பதாக தெரிகிறது.

இதனை தவிர்ப்பதற்காக வீண் குழப்பங்களை ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்து கொள்வதற்காக அமெரிக்காவுடன் தவிர்க்க முடியாத தந்திரோபாயக் கூட்டை வைத்திருக்க வேண்டிய நிலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

இல்லா விட்டால் ஈரான் விடயத்தில் இலங்கை அமைதியாக இருக்க முடியாது. ஈரான் இலங்கைக்கு பல தசாப்தங்களாக பெரும் உதவிகளை வழங்கி வந்திருக்கின்ற நாடு. தனிப்பட்ட ரீதியாகவோ அரசு என்ற ரீதியாகவோ இலங்கை அதற்கு நிறையவே கடமைப்பட்டிருக்கிறது.

அப்படியிருந்தும் ஒரு துக்க செய்தியை கூட பரிமாறிக் கொள்ள முடியாத நிலையில், அநுரகுமார திசாநாயக்க அரசாங்கம் சிக்கியிருக்கிறது.

இது இலங்கையின் நடுநிலை கொள்கைக்கு அல்லது அணிசேரா கொள்கைக்கு ஒரு பெரும் சவால்.

இஸ்ரேலுடனும் தவிர்க்க முடியாத உறவுகளை அது பேணத் தொடங்கி விட்டது.

பொருளாதார மீட்சிக்காக இத்தகைய ஒரு பாரம்பரிய உறவை பணயம் வைக்க வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டிருக்கிறது. இலங்கையின் இந்த அமைதியையிட்டு ஈரான் அதிருப்தி அடைந்திருக்கிறது என்பதை, ஈரானின் தூதுவரின் செவ்வியொன்று வெளிப்படுத்தியிருக்கிறது. நடுநிலை என்பது, அமைதியாக இருப்பதல்ல என்று அவர் கூறியிருந்தார்.

இலங்கை தரப்பில், கண்டனமோ, இரங்கலோ வெளியிடப்படாத நிலையில், ஈரானிய தூதரகம், கடந்த புதன்கிழமை இரங்கல் புத்தகத்தை திறந்தது. அதில் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் கையெழுத்திட்ட பின்னரே, இரங்கலை வெளியிட்டார். இது தவிர்க்க முடியாதபடி வெளியிடப்பட்ட இரங்கல்.

முன்னதாக கடந்த திங்கட்கிழமை, இலங்கையின் மௌனம் குறித்து, ஊடகச் சந்திப்பில் கேள்வி எழுப்பிய போது, வெளிவிவகார அமைச்சின் ஊடாக விரைவில் இரங்கல் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்தார்.

ஆனாலும் புதன்கிழமை இரங்கல் பதிவேடு திறக்கப்படும் வரை அவ்வாறான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஐக்கிய அரபு இராச்சியம் மீதான தாக்குதலைக் கண்டித்த ஜனாதிபதி அரகுமார திசாநாயக்க, ஈரான் மீதான தாக்குதல் பற்றி வாய் திறக்கவில்லை. ஈரான் உயர் தலைவரின் மரணம் பற்றி வாய்திறக்கவில்லை.

இந்த நிலையானது, இலங்கைத் தீவு தனது சுயாதீனத்தன்மையையும் இறைமையும் அமெரிக்காவிடம் இழந்து கொண்டிருக்கிறது என்பதை தெளிவாக காட்டுகிறது.




நீங்கள்
6 இல் 1 கனவுப்
பயணங்களை
வெல்ல முடியும்

மார்ச் 28, 2026 வரை செக் அவுட்டின்
போது உங்கள் Aeroplan®
கார்டை ஸ்கேன் செய்தால் போதும்.*

LCBO

தயவுசெய்து பொறுப்புடன் ரசித்து மகிழுங்கள்

*எதுவும் வாங்கத் தேவையில்லை. போட்டி மார்ச் 1, 2026 அன்று கிழக்கு நேரம் நள்ளிரவு 12:00 மணிக்குத் தொடங்கி **மார்ச் 28, 2026** அன்று கிழக்கு நேரம் இரவு 11:59 மணிக்கு முடிகிறது. நீங்கள் வெற்றி பெற ஆறு (6) பெரிய பரிசுகள் காத்திருக்கின்றன, ஒவ்வொன்றும் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்: (i) உலகம் முழுவதும் Air Canada நிறுவனத்தின் விமானச் சேவையில் உள்ளடங்கிய எந்தவொரு இடத்துக்கும், Air Canada மூலம் சேவை வழங்கப்படும் ஏதேனும் கனடிய விமான நிலையத்தில் இருந்து Air Canada மூலம் இயக்கப்படுகின்ற ஏதேனும் ஒரு விமானத்தில் சென்று திரும்புவதற்கான இரண்டு (2) எகானமி வகுப்பு பயணச்சீட்டு (கள்) (Air Canada Express® பெயரின் கீழ் Air Canada Rouge® மூலம் இயக்கப்படுகின்ற விமானங்கள் உட்பட); மற்றும் (ii) Aeroplan HotelSavers மூலம் வழங்கப்படுகின்ற 100,000 Aeroplan புள்ளிகள் (பெரிய பரிசின் தோராயமான விற்பனை மதிப்பு: $12,950 CAD). பதிவு செய்ய நீங்கள் 19+ வயதுடையவராகவும், ஒன்றாரியோவில் சட்டப்பூர்வமாக வசிப்பவராகவும், Aeroplan உறுப்பினராகவும் இருக்க வேண்டும். தகுதியுள்ள பதிவுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு தீர்மானிக்கப்படும். ஒரு நபருக்கு நூறு (100) பதிவுகள் மட்டுமே வழங்கப்படும். திறன் சோதனைக் கேள்வி கட்டாயமானது. அஞ்சல் மூலமும் பதிவுகளை மேற்கொள்ள முடியும். போட்டியின் முழுமையான விவரங்களுக்கு **www.LCBO.com/pourandexplorecontest**-ஐப் பார்க்கவும். ®Aeroplan என்பது, Aeroplan® Inc. நிறுவனத்தின் பதிவுபெற்ற வர்த்தகச் சின்னம் ஆகும். இது உரிமம் பெற்றுப் பயன்படுத்தப்படுகின்றது. பயன்படுத்துவதற்கான உரிமத்தைப் பெற்றுள்ள ®Air Canada மேப்பிள் இலைச் சின்னம் Air Canada நிறுவனத்தின் வர்த்தகச் சின்னம் ஆகும், இது உரிமம் பெற்றுப் பயன்படுத்தப்படுகின்றது.

விவரங்களுக்கு
ஸ்கேன்
செய்யவும்

# வாழ்நாள் போராளிகளும் தேர்தல் அரசியலும்

தமிழ்நாட்டில் மூத்த கொம்யூனிஸ்ட் தலைவர் நல்லகண்ணு இயற்கை எய்தி சில நாட்களில் நடிகர் விஜய்யின் மனைவி விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தை அணுகிய செய்தி வெளிவந்தது. நல்லகண்ணுக்கு அஞ்சலிகள். வணக்கங்கள் புகழுரைகள். இரங்கள் உரைகள் போன்றன வெளிவந்து கொண்டிருந்த ஒரு பின்னணிக்குள் விஜயினுடைய விவாகரத்து செய்தியும் வெளிவந்தது. தமிழ்கூறும் நல்லுலகில் அதிகம் வைரல் ஆகியது எதுவென்று பார்த்தால் விஜயின் விவாகரத்துச் செய்தி தான்.

நமது காலத்தில் வாழ்ந்து மறைந்த ஒரு முன்னுதாரணம் மிக்க இலட்சியவாதி. அரசியல்வாதி. செயற்பாட்டாளர் நல்லகண்ணு எனலாம். அவருக்கு அஞ்சலி செலுத்திய தமிழக முதல்வர் ஸ்டாலின் அவரை வாழ்நாள் போராளிக்கு வீரவணக்கம் என்று கூறி முழக்கமிட்டார்.

நல்லகண்ணுவைப் போல நல்ல மனிதர்களை அரசியலில் அரசியல் செயற்பாட்டில் காண்பது அரிது. அவர் 101 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். தமிழ்நாட்டில் அதிக காலம் சிறையில் இருந்த கொம்யூனிஸ்டுகளில் அவரும் ஒருவர். தன்னுடைய வாழ்நாளில் அவர் என்றைக்குமே தனியார் மருத்துவமனைக்குச் சென்றதில்லை. இறுதி நாள் வரையிலும் அவர் அரச மருத்துவமனைக்குத் தான் சென்றார். தனக்கென்று பெரிய அளவில் சொத்துக்களைச் சேர்த்ததில்லை. தன் குடும்பத்துக்கும் சேர்த்ததில்லை. தனக்கு கிடைத்த பரிசுகளையும் நன்கொடைகளையும் அவர் பொது நலனுக்கே செலவழித்தார் .101 ஆண்டுகள் ஏறக்குறைய ஒரு சன்னியாசியைப் போல அவர் வாழ்ந்தார்.உண்மையாகவே ஒரு வாழ்நாள் போராளியாக வாழ்ந்தார்.

ஆனால் துயரம் என்னவென்றால், அவருடைய மிக நீண்ட வாழ்நாளில் அவர் என்றைக்குமே தமிழகத்தில் எந்த ஒரு தேர்தலிலும் வெற்றி பெற்றதில்லை. அவரைப் போன்ற நேர்மையான ஒரு செயற்பாட்டாளரை தமிழ்நாடு என்றைக்குமே தனது பிரதிநிதியாகத் தெரிவு செய்யவில்லை. ஏன்?

அவரை வாழ்நாள் போராளி என்று கூறுகிறார்கள். மக்களுக்காகவே வாழ்ந்தவர் என்று கூறுகிறார்கள். இலட்சியத்தை விட்டுக் கொடுக்காதவர் என்று போற்றுகிறார்கள். ஆனால் அவரை என்றைக்குமே தேர்லில் வெற்றி பெற வைக்கவில்லை. ஏன்? நல்லவர்கள் அரசியலுக்கு வந்தால் தானே நாடு உருப்படும்? அரசியலுக்கு நேர்மையானவர்கள். கண்ணியமானவர்கள் காவி வேடம் பூணாத உண்மையான சந்நியாசிகளின் தொகை அதிகரித்தால் தான் நாடு உருப்படும். ஆனால் தமிழ்கூறும் நல்லுலகம் நல்லகண்ணுகளை விடவும் நடிகர்களைத் தானே எதிர்பார்ப்போடு பார்க்கிறது?

வாழ்நாள் போராளிகள். வாழும் காலத்தில் போற்றப்படாமல் இறந்த பின் ஏன் போற்றப்படுகிறார்கள்? வாழும் காலத்தில் அவர்களுடைய அருமை ஏன் தமிழ் சமூகத்துக்குத் தெரியாமல் போகிறது? வாழ்ந்து மறைந்த பின் தான் அவருக்கு சிலை வைத்துப் பட்டம் சூட்டிக் கொண்டாடுகிறார்கள்.

ஆனால் மேற்கு வங்கத்தில் திரிபுராவில், கேரளத்தில் ஓரளவுக்கு நேர்மையான இடதுசாரி தலைவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு திரிபுராவில் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஒரு முதலமைச்சரைப் பற்றிய செய்திகளை சமூக வலைத்தளங்களில் பார்க்க முடிந்தது. அவர் மிக எளிமையாக வாழ்ந்தார். சொத்துச் சேர்க்கவில்லை. அரச போகங்களை அதிகம் அனுபவிக்கவில்லை. அவருடைய மனைவி ஒர் அரச ஊழியர். முச்சக்கர வண்டியில் தான் அலுவலகத்துக்குச் சென்றார். அரசு வாகனத்தில் சென்றதில்லை. அப்படிப்பட்ட எளிமையான ஒருவரை திரிபுரா மக்கள் தமது தலைவராகத் தெரிவு செய்தார்கள். ஆனால் இந்திய மாநிலங்களில் அதிகம் கல்வியறிவுடைய மாநிலங்களில் ஒன்றாகக் கணிக்கப்படும் தமிழ்நாட்டில் ஏன் நல்லகண்ணுகள் தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை?

நடிகர்களுக்காகத் தீக்குளிக்கும் ஒரு சமூகம். நடிகர்களுக்காக மீசையை வழித்துக் கொள்கிற மொட்டை அடித்துக் கொள்கிற ஒரு சமூகம். நடிகர்களைப் பார்க்கப் போய் நசிந்து சாகும் ஒரு சமூகம். அரசியலில் நடிக்க



மறுத்து நேர்மையாக வாழ்ந்த மனிதர்களை ஏன் அவர்கள் வாழும் காலத்திலேயே போற்றத் தவறுகிறது?

இது சமூகத்தின் கோளாறா? அல்லது நேர்மையான அரசியல் செயற்பாட்டாளர்கள் தேர்தல் அரசியலில் வெற்றிபெறத் தேவையான தந்திரங்களையும் வியூகங்களையும் கற்றுக் கொள்ளத் தயாரில்லையா? அல்லது அவர்களால் அவற்றைக் கற்றுக் கொள்ள முடியவில்லையா? இதில் இரண்டாவது விடயம் அதிகம் விவாதிக்கப்பட வேண்டியது. இது தமிழ்கூறும் நல்லுலகில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் அவதானிக்கப்பட்ட ஓரம்சம். தேர்தல் மைய அரசியலில் நேர்மையானவர்கள் தங்களைப் பொருத்திக் கொள்வதற்கு அல்லது சுதாகரித்துக் கொள்வதற்கு ஒன்றில் விரும்புவதில்லை. அல்லது அவர்களுக்கு முடியவில்லை.

ஆசிய ஆப்பிரிகக் காலத்தின் அமெரிக்க தேர்தல் ஜனநாயகங்களில் மட்டுமல்ல மேற்கத்திய தேர்தல் ஜனநாயகங்களிலும் அந்த நிலைமை உண்டு.

பொதுவாக புத்திசாலித்தனத்திற்கும் ஜனரஞ்சகத்துக்கும் பொருந்தி வருவது குறைவு. இதில் புத்திசாலித்தனத்தை ஜனரஞ்சகமாக விற்கத் தெரிந்தவர்கள் அரிதாக வெற்றி பெறுகிறார்கள். பெரும்பாலான அறிஞர்களும் நேர்மையானவர்களும் தேர்தல்மைய அரசியலில் தேர்தல் போட்டிகளில் இறங்கி அசிங்கப்பட வேண்டியிருக்கும் என்று கருதுகிறார்கள். அதனால் பெரும்பாலும் பின் வாங்குகிறார்கள்.

அது மட்டுமல்ல. தலைமைத்துவம் எனப்படுவது தனிய அறிவு மட்டுமல்ல. தியாகம் மட்டும் அல்ல. வீரம் மட்டும் அல்ல. அது ஒரு கலப்பு ஒழுக்கம். அறிவு கூடியவர்கள் பல சமயங்களில் இதயத்தால் செழிப்பில்லாதவர்களாக இருப்பார்கள். அறிவு கூடியவர்கள் பல சமயங்களில் தலைமைத்துவ பண்பு இல்லாதவர்களாக இருப்பார்கள். புத்திசாலிகள் பல சமயங்களில் இதயம் இல்லாதவர்களாக இருப்பார்கள். உன்னதமான தலைமை என்பது அறிவும் இதயமும் இணைந்து மேல் எழுவது. அது மிக அரிது.

நான் திரும்பத் திரும்ப கூறும் ஒரு நடைமுறை உதாரணம் உண்டு. தூய தங்கத்தை வைத்து ஆபரணம் செய்ய முடியாது. அதில் செப்பைக் கலக்க வேண்டும். அதாவது தங்கத்தை பிரயோக நிலைக்குக் கொண்டு வருவதென்றால் அங்கே கலப்பு அவசியம்.தூய தங்கத்தை வேண்டுமானால் அயர்ண் சேவில் வைக்கலாம். ஆனால் ஆபரணமாக்க முடியாது.

அப்படித் தான் பொது வாழ்விலும் அரசியலிலும். தங்களைத் தூய தங்கங்களாகக் கருதுபவர்கள். செப்போடு கலக்கத் தயாராக இல்லாதவர்கள், நடைமுறை அரசியலில் இறங்க முடியாது.

தேர்தல் மைய அரசியலுக்கு என்று தொழில் திறன்கள் வேண்டும். தந்திரங்கள் வேண்டும் உத்திகள் வேண்டும் செல்வம் வேண்டும் புகழ் வேண்டும் தலைமைத்துவப் பண்பு வேண்டும். இவையனைத்தும் ஒன்றாக வாய்க்கப் பெற்றவர்கள் தேர்தல்மைய அரசியலில் வெற்றி பெறுகிறார்கள். தூய தங்கமாக இருப்பவர்கள் அல்லது தூய அறிஞர்களாக இருப்பவர்கள் தேர்தல்மைய அரசியலில் வெற்றி பெறாமல் போகும் இடங்கள் இவை தான். தமிழ்நாட்டில் நல்லகண்ணு மட்டுமல்ல. மணிப்பூரில் இரோமி சர்மிளா என்ற பெண் மக்களுக்காக நீண்ட நாட்கள் உண்ணாவிரதம் இருந்தவர். தேர்தல் கேட்டபோது அவருடைய மக்கள் அவரை குரூரமாக நிராகரித்தார்கள்.





ஈழத்தமிழர்கள் மத்தியிலும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு அவயங்களை இழந்தவர்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார்கள். ஒருவருமே வெற்றி பெறவில்லை. அவர்களுக்காக பிரச்சாரத்தில் ஈடுபட்ட முன்னாள் இயக்கத்தவர் ஒருவர் சொன்னார். கிட்டத்தட்ட 15.000 வீடுகளுக்கு ஏறி இறங்கியிருப்போம் என்று. ஆனால் அவர்கள் எந்தப் பெண்ணுக்காகப் பிரச்சாரம் செய்தார்களோ. எந்த மக்களுக்காக அந்தப் பெண் தன் ஒரு காலை இழந்தாரோ, அவருக்கு கிடைத்த வாக்குகள் மொத்தம் 2000. ஆனால் அர்ஜுனாவுக்கு கிடைத்தவை அதை விடப் பல மடங்கு. அப்படியென்றால் தமிழ்மக்கள் யார் தங்களுக்குத் தலைவர்களாக வரவேண்டும் என்று விரும்புகிறார்கள் ?

ஆயுதப் போராட்ட அரசியலும் தேர்தல்மைய அரசியலும் ஒன்று அல்ல. இலட்சியவாத அரசியலும் தேர்தல்மைய

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**



அரசியலும் ஒன்று அல்ல என்பதைத் தான் மனிதகுல வரலாறு தொடர்ச்சியாக நிரூபித்து வந்திருக்கிறது. இங்கே தான் நல்ல கண்ணுகள் தம் சொந்த மக்களாலேயே தெரிவு செய்யப்படாமல் போகிறார்கள்.அல்லது இறந்த பின் அதிகம் போற்றப்படுகிறார்கள்.

இதில் ஈழத் தமிழர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் எதுவென்றால், 2009க்குப் பின்னரான ஈழத்தமிழ் மிதவாத அரசியலானது இன்னமும் சரியான ஒரு தடத்தில் ஏறவில்லை. ஒரு பகுதியினர் அதனை ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியாக.இலட்சிய வாதமாகப் பார்க்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் அவர்களுக்கு வாக்களிப்பது குறைவு.

இதன் பொருள் தமிழ்மக்கள் இலட்சிய வாதத்திற்கு எதிரானவர்கள் என்பதல்ல. இங்கே தவறு தமிழ்மக்களில் இல்லை. மாறாக இலட்சியவாதிகளால் தங்களுடைய அரசியலை தேர்தல் மொழியில் மொழிபெயர்க்கத் தெரியவில்லை என்பது தான். தமது இலட்சியங்களை நிறுவனமயப்படுத்த முடியவில்லை என்பது தான். அதற்குத் தேவையான கட்டமைப்புகளையும் அவர்கள் கட்டி எழுப்பத் தவறுகிறார்கள்.

அண்மையில் தமிழகத்தில் மேற்படிப்புக்காகச் சென்ற ஒரு கிறிஸ்தவ மதகுரு விடுமுறையில் வந்தபோது சொன்னார் அங்கே கிராம மட்டத்தில் வட்டச் செயலர் என்ற பொறுப்பு எவ்வளவு முக்கியமானது. வினைத்திறன் மிக்கது? என்று. கீழிருந்து மேலோக்கி வாக்காளர்களை கட்சி மயப்படுத்துகின்ற வேலையை வட்டச் செயலர்கள் செய்கிறார்கள்.

தமிழ்த்தேசிய கட்சிகளில் எத்தனை அவ்வாறான கீழ்மட்டக் கட்டமைப்புகளைக் கொண்டிருக்கின்றன? தமிழரசுக் கட்சியிடம் ஓரளவுக்கு உண்டு. அதனால் தான்.அந்தக் கட்சி வடக்கு – கிழக்கு தழுவிய ஒப்பீட்டளவில் அதிக வெற்றிகளைப் பெறுகின்றது.

எனவே தமிழ்த் தேசிய அரசியலில் தூய்மைவாதம், இலட்சியவாதம் பேசுகின்ற கட்சிகள் முதலில் செய்ய வேண்டியது தங்களுக்குள்ள மக்கள் ஆதரவை நிறுவனமயப்படுத்துவது கட்சி மயப்படுத்துவது அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை(22ம் பக்கம் பார்க்க)

# ஹண்டுவா - சுண்டுக்கொத்து அரசியல்

கட்டுரையாளர்:-
– அழகு குணசீலன் –

இலங்கையின் அரசியல் களத்தில் கடந்த வாரம் இடம் பெற்ற நிகழ்வுகள் சுவாரஸ்யமானவை. உலகம் மத்திய கிழக்கு மேற்காசிய போர் மேகங்களால் மூடப்பட்டிருக்கும் ஒரு ஸ்த்திரத் தன்மையற்ற பதட்டமான பூகோள அரசியல் சூழலில் இவை இடம் பெற்றுள்ளன என்பது இவற்றின் முக்கியத்துவத்திற்கு மேலும் வலுச் சேர்க்கிறது. அப்படி என்ன தான் நடந்தது? என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியாததல்ல. எனினும் அதன் பின்னணி அரசியலை பேச இப்பத்தி முனைகிறது.

(1) ஈரானின் கடற்படை கப்பல்களுக்கு சர்வதேச – இலங்கை கடற்பரப்பில் நடந்த தாக்குதல் சம்பவங்கள் இன்னும் இந்து சமூத்திரத்தில் ஆழச் சூழியோடி மூலத்தை தேட வேண்டியவையாக உள்ளன.

(2). இலங்கைக்கு வெளிச்சம் ஏற்ற வேண்டிய நிலக்கரி விவகாரத்தில் அரசாங்கம் கரியை தானே அள்ளி முகத்தில் பூசிக்கொள்கிறது.

(3) இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் விஜய ஹேரத் இந்திய பெருங்கடலின் எதிர்காலம் குறித்த குழுவாதத்தில் கேள்விக்கு பதிலளிக்க திக்குமுக்காடியது, அநுர அரசாங்கம் முக்காடு போட்டு மூட முடியாத அளவுக்கு இராஜதந்திர பலவீனத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.

வளைகுடா போர் ஆரம்பித்த போது, கோத்தபாய காலத்து தாக்கம் (Effect) அனுபவம் காரணமாக எரிபொருள் நுகர்வோர் வரிசைகள் நீண்டன. இந்த நிலையில் உண்மையில் பாராளுமன்றத்தில் மக்களின் அச்சம் நியாயமற்றது என்று பதிலளிக்க வேண்டியவர் எரிபொருள், மின்சக்தி அமைச்சர். எரிபொருள் இருப்பையும், எவ்வளவு காலத்திற்கு போதுமானது என்பதையும் அவர் கணக்கு காட்டியிருக்க முடியும். அதற்கான பொறுப்பு அந்த அமைச்சர் ஜெயக்கொடிக்கு உரியது. ஆனால் நடந்தது என்ன? ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க திடீரென பாராளுமன்றத்தில் தோன்றி எரிபொருள் இருப்பு பட்டியலை சமர்ப்பித்தார். இதன் பின்னணி என்ன?

அமைச்சர் ஜெயக்கொடிக்கு எதிராக 9 பில்லியன் ரூபா ஊழல் குற்றச்சாட்டு புகார் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது. தற்போதைய எரிபொருள் கொந்துராத்து விவகாரத்தில் மட்டுமல்ல அவருக்கு ஏற்கனவே உர நிறுவனத்தின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் 8.8 மில்லியன் ஊழல்மோசடி முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. இதனால் தான் அவரிடம் இந்த பொறுப்பை கையளித்தால் எதிர்க்கட்சிகள் அவரை பாராளுமன்றத்தில் பதம் பார்த்து விடுவார்கள் என்பதால் ஜனாதிபதியே தானே மீட்பராக தோன்றி அவரைக் காப்பாற்றினார்.

இது ஜே.வி.பி– என்.பி.பி. அரசாங்கமும் கடந்த கால SLPP SLPP+ UNP அரசாங்கங்கள் போன்று கட்சி அரசியல் சார்ந்து தங்கள் அமைச்சர்களை காப்பாற்ற துணிந்து விட்டதா? என்ற கேள்வியை எழுப்புகிறது. இங்கு முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுனா மகேந்திரன் போன்றவர்கள் நினைவுட்டப்பட வேண்டியவர்கள். இனியும் காப்பாற்ற முடியாது என்ற சூழ்நிலையிலேயே ரம்புக்வெல்ல கைது செய்யப்பட்டார்.

இது ஒரு தவறான முன் மாதிரி இதை ஊழல் ஒழிப்பு ஜே.வி.பி–என்.பி.பி. அரசியலும் பின் பற்றக்கூடாது அமைச்சர் குமாரஜெயக்கொடி அமைச்சர் அவையில் இருந்து நீக்கப்பட்டு விசாரணைகள் தொடர வேண்டும் என்று கொழும்பு பிரபல ஆங்கில நாளிதழ் ஒன்று தனது ஆசிரியத் தலையங்கத்தை தீட்டியுள்ளது. நியாயமான கோரிக்கை தான். அநுரகுமார எதிர்க்கட்சியில் இருந்திருந்தால் இதையே கோரியிருப்பார். இதுவும் ஹண்டுவா – சுண்டுக் கொத்து கட்சி அரசியல் தான். அரசாங்கம் அமைச்சர் குமார ஜெயக்கொடியை பாதுகாக்கிறது. அந்த பாராளுமன்ற உரையில் தான் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கிழக்கின் நெற்களஞ்சியமாக இருந்த இலங்கை இப்போது ஹண்டுவாவாக மாறி விட்டது என்ற கருத்தை வெளியிட்டார். ஜனாதிபதி அநுரகுமாரவின் பேச்சாற்றல், சிங்க மொழிவளம், வார்த்தைகளை வசதியாக பயன்படுத்தும் சிலம்படிகள் அவருக்கே தனித்துவமானவை. ஹண்டுவாவை அவர் பயன்படுத்தியது இந்த நாட்டை நாசமாக்கியவர்கள் நீங்கள் என்று எதிர்கட்சியினருக்கு சொல்லாமல் சொல்வதற்கு. இந்த ஹண்டுவா நம்ம ஊர் சுண்டுக்கொத்து முதன்மையாக நெல் அரிசி மற்றும் தானியங்களை அளவிடப் பயன் படும் அளவுகோல். வேண்டுமானால் விளக்கத்திற்காக

இந்த சுண்டு ஒரு தகரப் பேணி. அனேகமாக கட்டிப்பால்– ரின்பால் வெற்று தகரப்பேணிகளே கிராமங்களில் இதற்கு பயன்படுத்தப்பட்டன. ஒரு தகரப்பேணி = ஒரு சுண்டு நான்கு சுண்டுகள் = ஒரு கொத்து ஆறு கொத்து = ஒரு மரைக்கால் பத்து மரைக்கால் = ஒரு சாக்கு மூன்று சாக்கு = ஒரு அவணம்.

இன்றைய நீட்டலளவை அளவீடு மீட்டர் – கிலோ மீட்டர் ஆக மாறிய போது, நிறுத்தலளவை அளவீடு கிலோ கிராம்– கிலோவாக மாறியபோது, தானியங்களும் நிறுக்கப்பட்டதால் அன்றைய முகத்தலளவை தொலைந்துபோனது.

இன்னொரு வகையில் இந்த சுண்டுக்குள் சில்லறையைப் போட்டு குலுக்கி பிச்சை எடுப்பவர்களும் இருந்தார்கள். மேலும் மட்டி, இறால் கூனி, கூனிக் கருவாடு, சிறிய பாலை, நாவல், வீரை காட்டு பழங்களும் கூட மட்டக்களப்பில் சுண்டால் அளந்து விற்கப்படும் வழக்கம் இருந்தது. கிராமிய பெட்டி கடைகளில் ஒரு சுண்டு தானியத்தை கொடுத்து அதற்கு பதிலாக வேறு பண்டங்களை வாங்கும் பண்ட மாற்றும் இருந்தது. இப்படி கிராமிய பொருளாதார வாழ்வியல் பண்பை தனக்குள் நிறைத்திருந்தது ஹண்டுவா — சுண்டு. ஜனாதிபதி கூறிய இந்த ஹண்டுவா பொருளாதாரத்திற்கு அன்றைய ஆட்சியாளர்கள் மட்டும் தான் பொறுப்பா....? இல்லை இன்றைய ஆட்சியாளர்களும் தான். இரண்டு தடவைகள் வன்முறையை கையிலெடுத்து இலங்கையின் தேசிய பொருளாதாரத்தை நாசமாக்கியதில் ஜே.வி.பி.யும் பங்காளி. வடக்கு – கிழக்கு யுத்தத்தில் 30 ஆண்டுகள் போருக்கு ஊக்கம் கொடுத்து, நியாயப்படுத்தி மக்களின் முதுகுக்குப் பின்னால் மறைந்து நின்று இந்த நாட்டின் தேசிய பொருளாதாரத்தை அழித்ததில் ஜே.வி.பி.க்கும் பங்குண்டு. இதனால் சுண்டை தூக்கி குலுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது நாட்டு அரசாங்கம்.

இன்றைய வளைகுடா போர் மூட்டத்திற்கு காலக்கெடு விதித்து அகற்றலாம் என்ற நம்பிக்கை குறைந்து வருகின்றது. போரை நான்கு, ஐந்து வாரங்களில் முடிவுக்கு கொண்டு வருவோம் என்ற டொனால்ட் டிரம்ப்பின் கணிப்பை பொய்யாக்கி வருகிறது ஈரான். போரின் விளைவுகள் உலகம் முழுவதும் பொருளாதாரத்தில் எதிரொலிக்க ஆரம்பித்திருக்கிறது. ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை 100 அமெரிக்க டொலர்களை எட்டியிருக்கிறது. இன்னும் ஏறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணெய் என்பது வெறும் இயந்திரங்களுக்கான இயக்கசக்தி மட்டும் அல்ல பொருளாதார பொருட்கள், சேவைகள் உற்பத்தி, விநியோக, நுகர்வு சங்கிலியின் மூலாதாரம். இந்த சங்கிலியில் இருந்து எந்த நாடும் விலகி இருக்க முடியாது. ஏற்கனவே இலங்கையில் QR பங்கீட்டு முறையை அறிமுகப்படுத்தக் கோரியிருந்தும் ஜே.வி.பி–என்.பி.பி. அரசாங்கம் அதற்கு சாதகமான சமிக்ஞை காட்டவில்லை. காரணம் வெளிப்படையானது. ரணில் விக்கிரமசிங்க அரசாங்க காலத்து நடைமுறையை பின்பற்றுவதற்கு அது வெட்கப்படுகிறது. ஆனாலும் இன்னும் காலம் கடந்து விடவில்லை தற்காலிகமாக பங்கீட்டு முறையை அமுல் செய்வதன் மூலம் இருக்கின்ற இருப்பின் பயன்பாட்டு காலத்தை சற்று நீடிக்க முடியும்.

பங்கீட்டு முறை எப்போதும் கள்ளச் சந்தைக்கு வழி வகுக்கும் என்பது பொதுவான கருத்து. ஆனால் அரசாங்கம் சட்டத்தை சரியாகப் பயன்படுத்தினால் கள்ளச்சந்தையை கட்டுப்படுத்த முடியும். இல்லையேல் எண்ணெய் விநியோகம் கட்டுப்படுத்தப்படா விட்டால் அரசாங்கம் நுகர்வோரை பாதுகாப்பதை விடவும் முதலாளிகளை பாதுகாக்கிறது என்றே கொள்ள வேண்டும். உற்பத்தி, விநியோகச் சங்கிலியில் ஏற்படும் செலவு அதிகரிப்பு பணவீக்கத்தை ஏற்படுத்தும், இலங்கை ரூபாயின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்படும். இது உலகச் சந்தையில் எமது ஏற்றுமதிகள் மலிவாக இருக்க வாய்ப்பளிக்கும். ஆனால் இன்றைய போர்ச் சூழலில் ஹர்முஸ் பயணப் பாதை தடுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் இந்த ஏற்றுமதி நன்மையை அடைய வாய்ப்பில்லை.

ஈரான் கடற்படை கப்பல் விவகாரங்கள் குறித்து இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் கடல் ஆதிக்கம் கேள்விக்கு உள்ளாகி இருக்கிறது. இலங்கை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் கொடுப்புக்குள் அடக்குகிறது. கடற்படை பயிற்சியில் நீர்மூழ்கிகளும் பங்கேற்றதாக கூறப்படுகிறது. மறுபக்கத்தில் பயிற்சி முடிந்த பின்னரும் ஈரானை அடைய இரண்டு மூன்று நாட்களே தேவையான நிலையில் ஈரானிய கப்பல்கள் பல நாட்களாக கடலில் என்ன செய்தன என்று கேள்வியும் எழுகிறது. அமெரிக்க நீர்மூழ்கிகளுக்கு பயந்து இவை பதுங்கினவா..? இதில் சிக்கலான முடிச்சை அவிழ்க்க வேண்டியது இலங்கை அல்ல இந்தியா. ஆனால் தற்போது இலங்கையின் தலையில் கட்டி விட்டு இந்தியா பார்வையாளராகி விட்டது. இந்த விவகாரத்தில் எவை பேசப்பட வேண்டுமோ அவை எவையும் வெளிப்படையாக பேசப்படவில்லை. இந்தியாவுக்கு ரஷ்யாவில் இருந்து எண்ணெய் வாங்க அனுமதியளித்திருக்கிறது அமெரிக்கா. அதில் ஒரு பகுதியை தானும் வாங்கலாம் என்று நினைக்கிறது இலங்கை. ஆக, இந்துமா சமுத்திர நாடுகள் பொருளாதாரத்தை காப்பாற்ற ஏகாதிபத்தியத்திற்கு என்ன விலை கொடுக்கவும் தயாராக உள்ளன.

இந்தியாவில் இந்திய பெருங்கடலின் எதிர் காலம் குறித்த குழுவாதத்தில் இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் கேள்விக்கு பதிலளிக்க திண்டாடியதும் கொடுப்புக்குள் அடக்குவது தான். ஆனால் அவர் அதில் தோற்றுப் போனார். இலங்கையின் இராஜதந்திர பலவீனத்தை அம்பலப்படுத்தினார். இது வெளியுறவுத்துறையின் திறனை – ஆளுமையை கேலிக்குரியதாக்கியிருக்கிறது. 600க்கும் மேற்பட்டோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். இவர்களில் செல்வாக்குமிக்க தலைவர்கள், இராஜதந்திரிகள், ஆய்வாளர்கள் முக்கியமானவர்கள். கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் அமைச்சர் நேரடியான கேள்வி ஒன்றுக்கு சுற்றிவளைப்பதும், கேள்விக்கு பொருத்தமற்ற தவறான பதிலை அளிப்பதும் அவரின் பதட்டத்தை வெளிப்படுத்துகிறது. இரண்டாவது (22ம் பக்கம் பார்க்க)



# தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பு முயற்சி வெற்றி பெறுமா?

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் தமிழ்ச் சட்டத்தரணிகளின் பேரவை ஈடுபட்டிருக்கிறது. இது தொடர்பாக வெளிவந்த உத்தியோகபூர்வ தகவல்களின்படி ஒரு புதிய யாப்பை அரசாங்கம் உருவாக்குமாக இருந்தால் அந்த யாப்பில் இனப் பிரச்சினைக்கான தீர்வாக எப்படிப்பட்ட ஒரு தீர்வு முன் வைக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் தமிழ் கட்சிகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கம் என்று கூறப்படுகிறது. குறிப்பாக சமஸ்டி தீர்வு ஒன்றை நோக்கி கட்சிகளை ஒருங்கிணைக்கும் நோக்கம் இதில் உண்டு என்பதனை அந்த உத்தியோகபூர்வ அறிக்கை காட்டுகிறது.

இந்த ஒருங்கிணைப்பு முயற்சிக்குள் தங்களை இணைத்துக் கொள்ளவில்லை என்று ஈபிடிபி கூறியுள்ளது. தங்களைப் போலவே மட்டக்களப்பில் உள்ள பிள்ளையானின் கட்சியின் உட்பட தமிழ் தேசிய நிலைப்பாட்டுக்கு வெளியில் காணப்படும் கட்சிகள் இங்கே அழைக்கப்படவில்லை என்று அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது. இதுதொடர்பான கேள்விகளுக்கு தமிழ்ச் சட்டத்தரணிகளின் பேரவை தான் பதில் கூறவேண்டும்.

கடந்த 16 ஆண்டுகளிலும் தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை பெருமளவுக்கு சிவில் சமூகங்களும் கருத்துருவாக்கிகளும் இணைந்து முன்னெடுத்தனர். சில சமயங்களில் இந்த முயற்சிகளில் பின்னணியில் சில அரசு சார்பற்ற நிறுவனங்கள் அல்லது தூதரகங்கள் இருந்ததாகச் சந்தேகிக்கப்பட்டது. அண்மையில் கூட சுவிஸ் தூதரகம் அவ்வாறான சந்திப்பு ஒன்றுக்கு அனுசரணை புரிய முன்வந்தது. எனினும் அந்தச் சந்திப்பு பின்னர் இடம்பெறவில்லை.

இவ்வாறு சிவில் சமூகங்களும் கருத்துருவாக்கிகளும் இணைந்து முன்னெடுத்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் பெரும்பாலானவை தோல்வியுற்ற ஒரு பின்னணிக்குள் அல்லது தற்காலிகமான சில வெற்றிகளை பெற்றபின் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படாத ஒரு பின்னனிக்குள், இப்பொழுது தமிழ் சட்டத்தரணிகள் பேரவை இந்த முயற்சியைக் கையில் எடுத்திருக்கிறது.

குறிப்பாக கடந்த ஆண்டு நிகழ்ந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பகுதி சிவில் சமூகங்களும் கருத்துருவாக்கிகளும் இணைந்து பொது வேட்பாளரை முன் நிறுத்தும் அமைப்பாகச் செயல்பட்டார்கள். அந்தத் தேர்தல் முடிந்த பின் சிவில் சமூகங்கள் தொடர்ந்து ஓர் அமைப்பாக இயங்க முடியாத ஒரு நிலைமை தோன்றியது. இப்பொழுது சிவில் சமூகங்களுக்கு இடையே வினைத்திறன் மிக்க ஒருங்கிணைப்பு இல்லை. தவிர, ஒரு சிவில் அமைப்பைத் தவிர ஏனைய சிவில் சமூகங்கள், கட்சிகளை ஒருங்கிணைத்தல் போன்ற முயற்சிகளில் பெரியளவு ஆர்வத்தோடு காணப்படவில்லை. அதாவது கடந்த ஓராண்டுக்கு மேலாக பெரும்பாலான சிவில் சமூகங்கள் கருத்துருவாக்கிகள் போன்றோர் இது போன்ற முயற்சிகளில் ஈடுபடுவதில் இருந்து விலகியிருப்பது தெரிகிறது. இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள் தான் மேற்படி தமிழ் சட்டத்தரணிகள் பேரவை இந்த முயற்சியைக் கையில் எடுத்திருக்கிறது.

இந்த அடிப்படையில் மேற்படி முயற்சி தொடர்பில் மிக அடிப்படையான ஒரு கேள்விக்கு விடை முக்கியம். கடந்த 16 ஆண்டுகளிலும் சிவில் சமூகங்களும் கருத்துருவாக்கிகளும் முன்னெடுத்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் ஏன் பொருத்தமான வெற்றிகளை அல்லது தொடர்ச்சியான வெற்றிகளைப் பெறத் தவறின?

இக்கேள்விக்குப் பதில் காண்பதென்றால் பேச்சுவார்த்தைகள், சமரச முயற்சிகள் தொடர்பில் உலகில் உள்ள மூன்று முக்கிய பொறி முறைகள் தொடர்பாக இங்கு பார்க்க வேண்டும். முதலாவது பொறிமுறை, அழுத்தங்களை, நிர்பந்தங்களைப் பிரயோகிப்பது. ஒருங்கிணைப்பு முயற்சிகளில் ஈடுபடும் தரப்பு பலப் பிரயோகத்தை மேற்கொள்வது அல்லது ஏதோ ஒருவகை அழுத்தத்தைப் பிரயோகிப்பது.

இரண்டாவது பொறிமுறை பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தரப்புகளுக்கு இடையில் உள்ள முரண்பாடுகளை நீக்கும் நோக்கத்தோடும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நோக்கி மேற்படி தரப்புகளை ஊக்குவிக்கும் நோக்கத்தோடும் தந்திரமான, நிர்ணயகரமான தலையீட்டை செய்வது.இது அனுசரணைப் பொறிமுறை. மூன்றாவது, சம்பந்தப்பட்ட தரப்புகள் சந்திப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுப்பது. அதற்குரிய போக்கு வரத்து வசதிகளை, இட வசதிகளை ஏற்பாடு செய்து கொடுப்பது.





கடந்த 16 ஆண்டுகளாக சிவில் சமூகங்கள், முரண்படும் கட்சிகளுக்கு இடையே அனுசரணையாளர்களாகத் தான் செயல்பட்டன.எந்த ஓர் ஒருங்கிணைப்பு முயற்சியிலும் சிவில் சமூகங்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஒரு தரப்பாகச் செயல்படவில்லை. அவ்வாறு செயல்படுவதற்கு சிவில் சமூகங்களால் முடியாது. ஏனென்றால் அதற்கு ஏதோ ஒரு பலம் இருக்க வேண்டும். ஏதோ ஒரு அங்கீகாரம் இருக்க வேண்டும். ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தரப்புகள் அதாவது கட்சிகள் சிவில் சமூகங்களை மதிக்க வேண்டும். அது பிரயோகிக்கும் அழுத்தங்களுக்குப் பணிய வேண்டும்.ஆனால் அப்படிப் பட்ட பலத்தோடு காணப்படும் சிவில் அமைப்புகள் எதனையும் அரங்கில் கடந்த 16 ஆண்டுகளாகக் காண முடியவில்லை.


குறிப்பாக முன்னாள் மன்னார் மறை மாவட்ட ஆயர் அவ்வாறான அழுத்தங்களைப் பிரயோகிக்கவல்ல துணிச்சலான, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் ஆளுமையாகக் கருதப்பட்டார். ஆனால் 2014ஆம் ஆண்டு அவருடைய தலைமையில் மன்னாரில் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு முயற்சி ஒன்றின் போது சம்பந்தர் ஆயரைப் பார்த்து என்ன சொன்னார்? பிஷப் நீங்கள் சொல்றதச் சொல்லுங்கோ. ஆனால் நாங்கள் ' தான் கடைசி முடிவு எடுப்பம் என்று.

சம்பந்தர் ஏன் அப்படிச் சொன்னார்? ஏனென்றால், அப்பொழுது உள்ளதில் பெரிய கட்சியாக கூட்டமைப்பு காணப்பட்டது. அதன் தலைவராக இருந்த சம்மந்தர் பிஷப்பைப் பார்த்து அவ்வாறு அழுத்தமாக திமிரோடு கூறக் கூடியதாக இருந்தது.

கிட்டத்தட்ட 12 ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலை அது. இப்பொழுது சம்பந்தர் இல்லை.பிஷப்பும் இல்லை. கூட்டமைப்பும் இல்லை. ஆனாலும் தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் இருப்பவற்றில் பெரிய கட்சியாகக் காணப்படுகிறது. அதன் தலைமைக்கான போட்டி கட்சியை உருக்குலைத்து விட்டது. எனினும் அதுதான் உள்ளதில் பெரிய கட்சி. தனக்குத்தான் மக்கள் ஆணை அதிகம் என்று அது கூறும்.

அது மட்டுமல்ல சம்பந்தர் முன்னாள் மன்னார் பிஷப் தலைமையிலான ஒருங்கிணைப்பு முயற்சிகளை ஒருவித ஒவ்வாமையோடு பார்த்ததற்குக் காரணம், அந்த முயற்சிகளின் பின்னணியில் கஜேந்திரக்குமாருக்கு ஆதரவான சிவில் சமூகப் பிரதிநிதிகள் இருந்தார்கள் என்று நம்பியது தான். இதை மறுவளமாகச் சொன்னால், கூட்டமைப்பில் இருந்து விலகி தேர்தலில் தோல்வியுற்ற கஜேந்திரக்குமாரைப் பலப்படுத்துவதற்கு சிவில் சமூகங்கள் முயற்சிக்கின்றன என்று சம்பந்தர் கருதினார்.

இப்பொழுதும் தமிழரசு கட்சியின் சுமந்திரன் அணி அப்படித் தான் நம்புகிறது. இப்பொழுதும் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி சிவில் சமூகங்களை ஒவ்வாமையோடு தான் பார்க்கின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சுமந்திரன் சிவில் சமூகங்களுக்கு எதிராக வன்மத்தோடு கருத்துக்களைத் தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய அரசியல்வாதி ஒருவர் அவ்வாறு சிவில் சமூகங்களை முன்னரும் தாக்கியிருக்கவில்லை. பின்னரும் தாக்கியிருக்கவில்லை. அந்த தேர்தலில் சிவில் சமூகங்களின் முயற்சியை எதிர்த்த சுமந்திரன் சஜித்துக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டார். சஜித் இப்பொழுது சிங்கள பௌத்த தீவிர நிலைப்பாட்டை எடுக்கும் பிக்குகளுக்குச் சாமரம் வீசுகிறார்.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், மேற்கண்ட இறந்தகால அனுபவத்தின் பின்னணியில் தொகுத்துக் கேட்டால் இப்பொழுது ஒருங்கிணைப்பு முயற்சிகளை முன்னெடுக்கும் தமிழ் சட்டத்தரணிகள் பேரவையானது கட்சிகளின் மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்கக் கூடிய பலத்தோடு இருக்கிறதா? அல்லது அனுசரனை மட்டும்தான் செய்கின்றதா?

இந்தக் கேள்வியை அதன் பிரயோக நிலையில் கேட்டால், தமிழரசுக் கட்சியின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கத்தக்க சக்தி அல்லது பலம் மேற்படி சட்டத்தரணிகள் அமைப்புக்கு உண்டா?

ஏனென்றால் கடந்த ஆண்டு முழுவதிலும் இவ்வாறான ஒருங்கிணைப்பு முயற்சிகளை கஜேந்திரக்குமார் முன்னெடுத்த பொழுது, அதனைக் குழப்பியது தமிழரசுக் கட்சிதான். குறிப்பாக சுவிட்சர்லாந்து தூதரகத்தின் முன்னெடுப்பையும் குழப்பியதில் அந்தக் கட்சிக்கு பங்கு உண்டு.

எனவே ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு இப்பொழுது தடையாக இருப்பது தமிழரசுக்கட்சி. அதன் மீது அழுத்தங்களைப் பிரயோகித்தால் மட்டும் தான் எந்த ஒருங்கிணைப்பு முயற்சியும் வெற்றிபெறும். அப்படிப் பட்ட அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தேவையான பலம் சட்டத்தரணிகள் அமைப்புக்கு உண்டா?

அந்த அமைப்புக்குள் பிரதானியாகக் காணப்படும் சட்டத்தரணி ரட்ணவேல் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஒரே பலமான சட்ட செயற்பாட்டு அமைப்பாகிய மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் பணிப்பாளராக இருக்கிறார். வடக்குக் கிழக்கில் காணப்படும் சட்டச் செயற்பாட்டு ஆளுமைகளுக்குள் அவர் முக்கியமானவர். மதிப்புக்குரியவர்.

ஆனால் தனது துறையைச் சேர்ந்த ஒரு மூத்த செயற்பாட்டாளரை சுமந்திரன் மதிப்பாரா? அப்படி மதிக்கத்தக்க உறவு இருவருக்கும் இடையில் உண்டா? இந்தக் கேள்விக்கான விடை மிக முக்கியம். ஏனென்றால் சட்டத்தரணிகள் அமைப்பின் முயற்சிகளின் பின்னணியிலும் கஜேந்திரக்குமாருக்கு ஆதரவான சிவில் சமூகத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் இருக்கலாம் என்று தமிழரசுக் கட்சி சந்தேகிக்க இடமுண்டு.

தமிழரசுக் கட்சியை குறிப்பாக சுமந்திரன் அணியை ஒரு வழிக்குக் கொண்டு வந்தால் மட்டுமே ஒருங்கிணைப்பு முயற்சிகள் வெற்றி பெறும். இது தான் கடந்த 16 ஆண்டு கால அனுபவம்.எனவே சுமந்திரனை இந்த விடயத்தில் சம்மதிக்கச் செய்வதற்கு தமிழ் சட்டத்தரணிகள் பேரவையால் முடியுமா? – நிலாந்தன் –

# தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள இணக்கம் தொடரட்டும்!

கடந்த 02ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இந்தச் சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிறிதரன், எஸ்.ரவிகரன் ஆகியோரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ரெலோவின் சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் கருணாகரம், பேச்சாளர் சுரேந்திரன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் க.ச.இரத்தினவேல், பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் உட்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர். இந்தச் சந்திப்பில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் அவர்களுக்கான அரசியல் தீர்வு, சமஷ்டி கட்டமைப்பை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதில் சகலரும் இணங்கியுள்ளனர். அந்த தீர்வு தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்திதிட்ட வரைவொன்றினை தயாரிப்பதற்கும் இணக்கம் எட்டப்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து போராடி வருகின்றனர். அன்று தமிழ் மிதவாதத் தலைவர்கள் அஹிம்சா வழியில் போராட்டங்களை நடத்தியிருந்தனர். அந்தப் போராட்டங்கள் தெற்கின் அரசின் தலைமைகளினால் செவிசாய்க்கப்படாததையடுத்து தமிழ் இளைஞர்கள் 1980களில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கும் நிலைமை ஏற்பட்டிருந்தது.

மூன்று தசாப்த காலமாக தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக ஆயுதப் போராட்டம் இடம்பெற்றது. இந்தப் போராட்டமானது நாட்டை பேரழிவுக்குள் இட்டுச் சென்றிருந்தது. யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்த நிலையில் 2009ஆம் ஆண்டு முதல் மீண்டும் ஜனநாயக வழியிலான போராட்டங்களில் தமிழ் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

எட்டு தசாப்தங்கள் நிறைவடைந்துள்ள போதிலும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு என்ற விடயமானது இன்னமும் கானல் நீராகவே இருந்து வருகின்றது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அரசியல் தீர்வு குறித்து கலந்துரையாடல்களை நடத்திய போதிலும் அவற்றினால் எத்தகைய பயனும் ஏற்படவில்லை.

பல்வேறு பேச்சுகள் நடத்தப்பட்டு, அரசியல் தீர்வுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்ட போதிலும் யோசனைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை எவையுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்கான சூழலும் ஏற்படுத்தப்படவில்லை.

தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சி அமைத்துள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காணப்படும் என்று அரசாங்கம் உறுதியளித்துள்ளது. புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று தேசிய மக்கள் சக்தியானது கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் பாராளுமன்றத் தேர்தலின் போதும் வாக்குறுதிகளை வழங்கியிருந்தது.

ஆனால் அரசாங்கம் ஆட்சியமைத்து



ஒன்றரை வருடம் பூர்த்தியடைந்துள்ள போதிலும் இன்னமும் அரசியல் தீர்வு தொடர்பிலோ அல்லது புதிய அரசியலமைப்பு குறித்தோ உரிய கலந்துரையாடல்கள் இடம்பெறவில்லை.

புதிய அரசியலமைப்புக்கான முயற்சிகள் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என்று அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. வெறும் வாக்குறுதிகளை வழங்கியுள்ள அரசாங்கம் அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரியவில்லை.

இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அக்கறை செலுத்துமாறு அரசாங்கத்தை தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகள் வலியுறுத்த வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அதற்கான அழுத்தங்களை கொடுக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

அரசியல் தீர்வுக்கான அழுத்தங்களை ஒரு பக்கம் கொடுத்துக் கொண்டு தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பான தமிழ்த் தேசியக் கட்சிகளின் பொதுவான நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் ஓர் தீர்க்கமான நிலைப்பாட்டுக்கு வர வேண்டியது இன்றியமையாததாகவுள்ளது.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகள் அனைத்தும் ஒன்றுகூடி, ஒற்றுமையாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு இதுதான் என்று வலியுறுத்தும் வகையில் திட்டவரைவொன்றை தயாரிக்க வேண்டியது இன்றியமையாததாகவுள்ளது.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகள் அக்கறை கொண்டுள்ள போதிலும் அதனை ஒன்றிணைந்து தயாரிக்கும் விடயத்தில் இழுபறி நிலைமை காணப்பட்டே வந்தது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அரசியல் தீர்வு தொடர்பில் பொதுவான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நடவடிக்கையில் இறங்கியிருந்தார். ஆனால், இந்த முயற்சி வெற்றியளித்திருக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து இலங்கை தமிழரசுக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் புதிய அரசியலமைப்பு தொடர்பிலும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்தும் பொதுவான ஆவணமொன்றை தயாரிப்பதற்கு இணக்கம் கண்டிருந்தனர். இது குறித்து சில கலந்துரையாடல்களும் இரு தரப்பினருக்கும் இடையில் இடம் பெற்றிருந்தன. ஏனைய கட்சிகளையும் இந்த முயற்சியில் ஒன்றிணைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.





ஆனாலும், ஏனைய கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சி வெற்றியளித்திருக்கவில்லை. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகளை அழைத்து பேச்சுவார்த்தை ஒன்றினை ஏற்படுத்துவதற்கு இலங்கையிலுள்ள சுவிட்ஸர்லாந்து தூதரகம் முயற்சியை மேற்கொண்டிருந்தது.

இவ்வாறான ஒரு முயற்சியை மேற்கொள்ளுமாறு இலங்கை தமிழரசுக் கட்சியினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் கோரிக்கை விடுத்திருந்ததாகவே தெரிகின்றது. இந்தப் பேச்சுவார்த்தை கடந்த மாதம் 19ஆம் திகதி நடைபெறுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. ஆனால், அரசியல் தீர்வு தொடர்பில் கட்சிகளின் மற்றும் சிவில் சமூகத் தரப்பினருடன் கலந்துரையாடுவதற்கான கூட்டமொன்றினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த மாதம் 15ஆம் திகதி ஏற்பாடு செய்ததையடுத்து சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவிருந்த சந்திப்பை இரத்துச் செய்யுமாறு தமிழரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் கோரியதற்கு இணங்க அந்தச் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தும் இந்த முயற்சி தோல்வியில் முடிந்திருந்தது. இதனையடுத்து தான் தற்போது தமிழ் சட்டத்தரணிகள் பேரவையானது மீண்டுமொரு முயற்சியை ஆரம்பித்திருக்கின்றது. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றமையும் சமஷ்டி தீர்வை வலியுறுத்தும் வகையில் திட்ட வரைவொன்றை தயாரிக்க இணங்கியமையும் வரவேற்கத்தக்க நடவடிக்கைகளேயாகும்.

ஆனாலும் இந்த பேச்சுவார்த்தையில் சகல தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் அழைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் தற்போது சுமத்தப்படுகின்றது. சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி உட்பட வேறு சில கட்சிகளுக்கு அழைப்பு விடுக்காமை தவறு என்ற தொனியில் கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

உண்மையிலேயே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைக்கப்பட்டு அரசியல் தீர்வுக்கான திட்டவரைவு தயாரிக்கப்படுவதே சிறந்ததாகும்.

தற்போதைய நிலையில் இலங்கை தமிழரசுக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் இந்த விடயத்தில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு ஏற்கனவே இணங்கியிருந்தன. ஆனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே இந்த விடயத்தில் தனி வழிப் போக்கை கொண்டிருந்தது. எனவே இந்த இரு தரப்புக்கும் இடையில் முதலில் முழுமையான இணக்கப்பாடு எட்டப்பட வேண்டியது அவசியமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகளும் ஒன்றிணைக்கப்பட்டு அரசியல் தீர்வு தொடர்பான பொதுவான திட்டவரைவு தயாரிக்கப்பட வேண்டும்

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் கலந்துரையாடி, பொதுவான திட்டவரைவொன்றை தயாரிப்பதற்கு தமிழ் தேசியக் கட்சிகளின் தலைமைகள் மத்தியில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வானது சமஷ்டி கட்டமைப்பை உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்பதில் பொதுவான இணக்கத்தை கண்டுள்ள தமிழ் தேசியக் கட்சிகளின் தலைமைகள், அதற்குரிய திட்டவரைவு தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடுவதென்றும் தீர்மானித்துள்ளனர்.

# ஓநாய்களும் ஆட்டுக் குட்டிகளும் ஈழத்தமிழர்களும்

ஒரு சிறுவர் கதையிலிருந்து தொடங்குவோம். ஓநாய் ஒன்று நீரோடையில் நீர் அருந்த வந்தது. அங்கே ஓர் ஆட்டுக்குட்டி நீர் அருந்தி கொண்டிருந்தது. ஓநாய் ஆட்டுக் குட்டியைப் பார்த்துச் சொன்னது டேய் நீ தான் போன மாதம் என்னை கேவலமான வார்த்தைகளால் திட்டியது. அதற்குத் தண்டனையாக உன்னை இப்பொழுது நான் கொன்று சாப்பிடப் போகிறேன் என்று. அதற்கு ஆட்டுக்குட்டி சொன்னது ஐயா நான் போன மாதம் பிறந்திருக்கவே இல்லை என்று. ஓநாய் சொன்னது அப்படியென்றால் அது உன்னுடைய அம்மாவாக இருக்கும். உன்னுடைய அம்மாவைத் தண்டிப்பதற்காக இப்பொழுது உன்னைச் சாப்பிடப் போகிறேன். என்று கூறி ஆட்டுக் குட்டியின் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

இந்தக் கதைக்குள் இருக்கும் செய்தி என்னவென்றால், கொல்வது என்று தீர்மானித்தால் அதற்கு ஒரு காரணம் தேவை. அது தான் இப்பொழுது ஈரானில் நடக்கிறது. முன்பு ஈராக்கில் நடந்தது. லிபியாவில் நடந்தது. ஈரானை அடிக்க வேண்டும். அதன் எதிர்ப்பை நசுக்க வேண்டும். ஈரான் கீழ்ப்படிந்தால் மேற்காசியா சுருண்டு விடும். எனவே ஈரானை நசுக்க வேண்டும்.

ஈரான் அணுகுண்டு தயாரித்துக் கொண்டிருக்கிறது. எனவே அதைத் தடுக்க வேண்டும் என்பது பிரதான குற்றச்சாட்டு. ஈரான் ஏன் அணுகுண்டை வைத்திருக்கக் கூடாது? அது பாரசீக நாகரிகத்தின் வழித் தோன்றல். பாரசீக நாகரிகமானது இப்போதிருக்கும் பெரும்பாலான ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளை விடவும் மூத்தது. ஒரு மூத்த நாகரீகம் அணுகுண்டை ஏன் வைத்திருக்கக் கூடாது?

இது தொடர்பாக ஓமானின் அனுசரணையோடு நடந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பில் பீட்டர் கிர்னஸ் என்பவர் எக்ஸ் தளத்தில் எழுதியுள்ளார். ஓமான் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் ராஜதந்திர உதவியாளரான அவர் கூறுவதின்படி. ஈரான் அமெரிக்காவோடு உடன்பாட்டுக்குச் சம்மதித்த பின்னர் தான் அமெரிக்கா ஈரானைத் தாக்கியிருக்கிறது.

அதாவது ஈரான் அணுகுண்டு உற்பத்தியைக் கைவிடும் விடயத்தில் அமெரிக்காவோடு ஏதோ ஒரு சமரசத்துக்கு வரத் தயாராக இருந்தது. பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டிருந்த ஒரு பின்னணியில் தான் ஈரான் தாக்கப்பட்டிருக்கிறது. ஆயின், இங்கே பேச்சுவார்த்தைகள் எனப்படுகின்றவை ஈரான் உஷார் நிலையில் இருப்பதைத் தடுக்கும் தந்திர நோக்கத்தைக் கொண்டவையா?

ஈரானின் அதிபர் இரும்பு கரம் கொண்டு நாட்டை ஆண்டார் என்று மேற்கு நாடுகள் கூறுகின்றன. பெண்களுக்கு உரிமை இல்லை. அரச எதிர்ப்பாளர்கள் ஈவிரக்கமின்றி வேட்டையாடப்படுகிறார்கள். உலகில் அதிகம் மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்ட நாடு.... போன்ற குற்றச்சாட்டுக்கள் உண்டு. அவற்றில் உண்மையுண்டு. ஆனால் அது ஈரானியர்களின் பிரச்சினை. அதற்காக ஈரானிய அதிபரை தண்டிப்பதற்கு வெளி நாடுகளுக்கு உரிமையும் இல்லை.

அதேசமயம் போரின் தொடக்க நாளில் சில நிமிடங்களிலேயே கொமெய்னியும் அவருடைய குடும்பமும் அழிக்கப்படும் அளவுக்கு ஈரான் பலவீனமாக இருந்திருக்கிறது. அதன் எல்லாப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தகர்த்தெறியும் அளவுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் வலிமையாக இருந்திருக்கின்றன. ஈரானின் வலிமையை உடைப்பதில் அதன் உள் எதிரிகளுக்கும் பங்கு இருந்திருக்கிறது. உள்ளே இருப்பவர்கள் வழங்கிய தகவல்களை வைத்துத் தான் கொமெய்னியின் தலை குறி வைக்கப்பட்டிருக்கிறது. தன்னைத் தானே மூடும் சமூகங்கள் தம்மைத் தாமே காட்டிக் கொடுப்பவர்களை உற்பத்தி செய்கின்றன.

எதுவாயினும் கடந்த மூன்று மாத காலப் பகுதிக்குள் அமெரிக்கா தன்னை உலகின் ஏகப் பெரு வல்லரசு என்று நிரூபிக்கும் இரண்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாக முடித்திருக்கிறது. முதலாவது வெனிசுலாவின் அதிபரை அவருடைய நாட்டுக்குள் இறங்கித் தூக்கியது. இரண்டாவது, ஈரானின் அதிபரும் உட்பட தீர்மானிக்கும் அதிகாரமுடைய உயர்மட்டத் தலைவர்களை போர் தொடங்கிய அன்றே தீர்த்துக் கட்டியது.

இறைமையுள்ள நாடு ஒன்றின் தலைவரை அந்த நாட்டுக்குள் இறங்கிக் கைது செய்கிறார்கள். மற்றொரு நாட்டின் தலைவரை குண்டு போட்டுக் கொலை செய்கிறார்கள். வெளிநாடுகளின் வான்பரப்புக்குள் ஆளில்லா விமானங்களை அத்துமீறி அனுப்பி ஆட்களைக் கொல்லுகிறார்கள் இலக்குகளை அழிக்கிறார்கள்.

இப்பொழுது சொல்லுங்கள். இறையாண்மை எங்கே இருக்கிறது? சுதந்திரம் எங்கே இருக்கிறது? நாடுகளின் ஆள்புல எல்லைகளுக்குப் பொருள் என்ன?


10 கோடி மக்களை கொண்ட ஈரானுக்கும் இது பொருந்தும். சிறிய இலங்கைத் தீவுக்கும் இது பொருந்தும். இலங்கைத் தீவின் 40 கடல் மைல் தொலைவில் வைத்து ஈரானியக் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. இது இந்தியாவின் செல்வாக்கு மண்டலம். அமெரிக்கா எதுவரை தான் வரமுடியும் என்பதனை அங்கே காட்டியிருக்கிறது.சிறிய இலங்கைத் தீவு சுதந்திரம்,இறைமை என்றெல்லாம் வீரம் காட்டவில்லை.

இந்தியா யாருடைய பக்கம்? இந்தியாவின் மௌனம் அதன் ராஜதந்திரமான வார்த்தைகள் எதை உணர்த்துகின்றன? ஈரானுக்கு அவர்கள் ஆதரவில்லை என்பதைத் தான். பாரசீகத்தைப் போலவே இந்திய பேரரசும் ஒரு பெரிய பண்பாட்டு நிலப்பரப்பு .ஆனால் ஒரு நாட்டின் ஆள்புல எல்லைக்குள் நுழைந்து அந்த நாட்டின் தலைவரைக் கொல்லும் காட்டு விதியை இந்தியா ஆதரிக்கின்றதா? எதிர்கின்றதா?

இப்படிப்பட்டதோர் உலகச் சூழலில் அரசற்ற சிறிய மக்கள் கூட்டமாகிய ஈழத்தமிழர்கள் கற்றுக் கொள்ள வேண்டியவை எவை?

ஒரு பகுதியினர் ஈரான் தாக்கப்படுவதை ரசிக்கிறார்கள். ஏனென்றால் ஈரான் இறுதிக் கட்டப் போரில் அரசாங்கத்தின் பக்கம் நின்றது. ஈரான் மட்டுமல்ல, கியூபா, வியட்நாம், பாலஸ்தீனம் போன்ற நாடுகளும் ஐநாவில் அரசாங்கத்தின் பக்கம்தான் நிற்கின்றன.

கியூபா எப்பொழுதும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் பாதிக்கப்படும் ஒரு நாடு. அங்கே மருத்துவ, பொருளாதாரத் தடை காரணமாக முதியவர்கள் இறந்து கொண்டிருப்பதாக ஒரு சிறுமி எழுதிய கடிதம் சமூக வலைத்தளங்களில் வாசிக்க கிடைத்தது. பொருளாதாரத் தடையால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் ஈழத் தமிழர்கள் கியூபாவின் பக்கம் தான் நிக்க வேண்டும். ஆனால் ஜநாவில் கியூபா ஈழத் தமிழர்களோடு நிற்பதில்லை.




இன்னுமோர் உதாரணம். மேற்காசியாவில் அரசற்ற குர்திஷ் மக்கள் வெவ்வேறு நாடுகளால் பங்கிடப்படுகிறார்கள். அங்கெல்லாம் அவர்கள் இப்பொழுது அமெரிக்காவின் உதவியோடு அந்தந்த அரபு நாடுகளுக்கு எதிராக போராடுகிறார்கள். இந்த இடத்தில் அவர்கள் அறநெறியின் அடிப்படையில் அமெரிக்காவுக்கு எதிராக நிற்க வேண்டுமா? அல்லது எதிரியின் எதிரி எனக்கு நண்பன் என்று ராஜதந்திரமாக முடிவெடுக்க வேண்டுமா? எது சரி? அறமா? விடுதலையா?

இந்த இடத்தில் அறமும் விடுதலையும் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. அரசற்ற சிறிய மக்கள் கூட்டத்துக்கு இது தான் விதி. ஏன் இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கும் இதுதான் விதி.

போர் என்று வந்தால் அங்கே தர்மம், நீதி நியாயங்கள் இருக்காது. வெற்றியை உறுதிப்படுத்துவது என்ற ஒரே இலக்கு மட்டும் தான் இருக்கும். அது ஒரு காட்டு விதி. அது நாகரீகமடைந்த மனிதர்களின் விதியல்ல. மனித குல நாகரீகம் என்பது போரைத் தவிர்ப்பது. ஆனால் விலங்குகளின் விதி அதுவல்ல.அங்கே வெல்வது தான் பிழைக்கும். அதுதான் காட்டு விதி. இங்கே தொடக்கத்தில் கூறப்பட்ட சிறுவர் கதையில் இருப்பது அதுதான்.

ஓநாய்கள் பசியோடு திரியும் காட்டுக்குள் தான் ஆட்டுக் குட்டிகளும் வாழ்கின்றன. ஈழத் தமிழர்களும் வாழ்கிறார்கள். ஓநாய்களிடமிருந்தும், சிங்கங்களிடமிருந்தும், ட்ராகன்களிமிடருந்தும் ஈழத் தமிழர்கள் தப்பிப்பிழைக்க வேண்டும். தமது போராட்டத்தின் நீதிக்கும் தமது ராஜதந்திர இலக்கிற்கும் இடையே ஏதோ ஒரு சமநிலையைப் பேண வேண்டும். கிறீஸ்து தன் சீடர்களுக்குப் போதித்தது போல இதயத்தில் புறாக்களைப் போல கபடமற்றவர்களாகவும். செயலில் பாம்புகளைப் போல எச்சரிக்கையுணர்வோடும் போராட வேண்டும்.



# இன்றைய நாஜிகளின் சர்வதேச காடைத்தனம்!




கட்டுரையாளர்:-
இலங்கையில் இருந்து
- வீ.தனபாலசிங்கம் -




மத்திய கிழக்கில் ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் நடத்தி வரும் போர் மத்திய கிழக்கைச் சூழ்ந்து கொண்டிருப்பது மாத்திரமல்ல, இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கும் பரவும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

தென்னிந்தியாவின் விசாகபட்டினத்தில் சர்வதேச கடற்படைப் பயிற்சிகளில் பங்கேற்ற பின்னர் நாடு திரும்பிக் கொண்டிருந்த ஈரானிய போர்க்கப்பல் ஒன்று கடந்த வாரம் மத்திய கிழக்கில் இருந்து 2000 மைல்கள் தொலைவில் இந்து சமுத்திரத்தில் இலங்கையின் தென் கரையோரத்தில் இருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால் அமெரிக்க நீர்மூழ்கியின் தாக்குதலில் மூழ்கடிக்கப் பட்டிருக்கிறது. இன்னொரு ஈரானியக் கப்பலை இலங்கை கடற்படை மனிதாபிமான அடிப்படையில் துறைமுகத்துக்கு கொண்டு வந்திருக்கிறது.

அண்மைய தசாப்தங்களில் வெள்ளை மாளிகையில் பதவியில் இருந்த ஜனாதிபதிகளில் படுமோசமான போர் வெறியராக விளங்கும் டொனால்ட் ட்ரம்பும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் இனப்படு கொலைச் சந்தேகநபராக அறிவிக்கப்பட்ட இஸ்ரேலிய பிரதமர் நெதான்யாகுவும் ஈரானுக்கு எதிராக விரைவாகப் போரைத் தொடங்கியிருக்கலாம். ஆனால் அந்தப் போருக்கு விரைவான முடிவு கிட்டப் போவதில்லை.

போர் தொடங்கிய முதல்நாளன்றே ஈரானின் அதியுயர் ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா அலி காமெனி குண்டு வீச்சில் கொல்லப்பட்டது குறித்து கொண்டாடிக் கொண்டிருக்கும் ட்றம்ப், ஈரானின் அடுத்த ஆன்மீகத் தலைவரைத் தெரிவு செய்வதில் தன்னை ஈடுபடுத்த வேண்டும் என்று அறிவித்திருக்கிறார். புதிய ஆன்மீகத் தலைவராக கொலையுண்ட தலைவரின் மகன் மொஜ்ராபா காமெனி தெரிவானதை அனுமதிக்க முடியாது என்பதே ட்ரம்பின் நிலைப்பாடாக இருக்கிறது.

ஈரானில் அமையக்கூடிய அடுத்த அரசாங்கம் தனது பொம்மையாக இருப்பதை உறுதி செய்வதே அவரது நோக்கம். ஜனவரியில் வெனிசூலா ஜனாதிபதி நிக்கலஸ் மதுரோவை அமெரிக்கப் படைகள் நியூயோர்க்கிற்கு கடத்திச் சென்றதைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட துணை ஜனாதிபதி டெல்சி றொட்ரிகஸைப் போன்று வாஷிங்டனின் விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய ஒருவரை ஈரானில் பதவியில் அமர்த்துவதே ட்ரம்பின் திட்டம்.

அயத்தொல்லா காமெனியின் கொள்கைகளை பின்பற்றும் புதிய ஈரானியத் தலைவரை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் அறிவித்திருக்கிறார். ஆனால், அத்தகைய ஒரு கையாளை இன்றைய ஈரானிய அரசாங்கத் தலைவர்கள் மத்தியில் கண்டு பிடிப்பது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது.

அயத்தொல்லா காமெனியின் மறைவையடுத்து ஈரானிய அரசு நிலை குலைந்துவிடும் என்று எதிர்பார்த்த அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இதுவரையில் ஏமாற்றமே கிடைத்திருக்கிறது. மிலேச்சத்தனமான குண்டுவீச்சுக்களை நடத்தி ஈரானில் அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ட்ரம்ப் அதேவேளை, அரசாங்கத்தைத் தூக்கியெறியுமாறு அந்த நாட்டு மக்களைக் கேட்கிறார்.

பாதுகாப்பு அமைச்சர் மற்றும் படைத் தளபதிகள் பலர் கொல்லப்பட்ட போதிலும், ஈரான் இஸ்ரேல் மீதும் அயல் அரபு நாடுகளில் உள்ள அமெரிக்கப் படைத் தளங்கள், சொத்துக்கள் மற்றும் தூதரகங்கள் மீதும் தொடர்ச்சியாக ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கிறது. ஆசியாவுக்கான வர்த்தகம் உட்பட உலகின் 20 சதவீதமான எண்ணெய் விநியோகத்துக்கு முக்கியமானதாக விளங்கும் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடிவிட்டது.

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சில நாடுகள் மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக ஈரானிய ஜனாதிபதி மசூத் பெசெஸ்கியான் கடந்த வெள்ளிக்கிழமை கூறிய அதேவேளை ட்ரம்ப் ஈரான் நிபந்தனையற்ற முறையில் சரணடைய வேண்டும் என்று கூறினார். நிபந்தனையற்ற சரணாகதியைத் தவிர, ஈரானுடன் வேறு எந்த உடன்பாட்டுக்கும் இடமில்லை என்பது அவரது நிலைப்பாடு.

பாரிய தாக்குதல்களை நடத்துவதற்கு ஈரான் தீட்டிக் கொண்டிருந்த திட்டத்தை முறியடிப்பதற்காக முன்னெச்சரிக்கையாகவே தாக்குதல்களை தொடங்கியதாக கூறும் அமெரிக்காவும் இஸ்ரேலும் அவற்றின் குற்றச்சாட்டை நிரூபிக்க எந்தவொரு சான்றையும் உலகின் முன் வைக்கவில்லை.

கடந்த வருடம் ஜூனில் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்களில் ஈரானின் சகல அணுவசதிக் கட்டமைப்புக்களும் நிர்மூலம் செய்யப்பட்டு விட்டதாகவும் அதற்குப் பிறகு ஈரான் எந்த அணுத் திட்டத்தையும் கொண்டிருக்க முடியாது என்றும் கூறிய ட்ரம்ப் ஈரான் அணுவாயுதங்களை தயாரிப்பதை தடுக்கவே தாக்குதல்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியிருந்ததாக குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சாசனத்தின் பிரகாரம் எந்தவொரு நாடும் அதற்கெதிராக உடனடியாக மேற்கொள்ளப்படக் கூடிய தாக்குதலுக்கு எதிராக தற்காப்புக்கு படைபலத்தைப் பயன்படுத்துவது சட்டபூர்வமானது. அல்லாவிட்டால் பாதுகாப்புச் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரமே தாக்குதலை நடத்த முடியும். அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி போரைப் பிரகடனம் செய்வதற்கு காங்கிரஸின் அனுமதியைப் பெறவேண்டும். இந்த நிபந்தனைகளில் எந்தவொன்றையும் ட்ரம்ப் நிறைவேற்றவில்லை.

ட்ரம்பின் போர் ஈரானை அழித்துக் கொண்டிருப்பது மாத்திரமல்ல இன்றைய பிரச்சினை. உலகின் உறுதிப்பாட்டுக்கு ஆதாரமாக இருக்கும் சட்ட முறைமைகள் சகலதையும் அவர் பலவீனப்படுத்திக் கொண்டிருக்கிறார். வெனிசூ லாவின் இறைமையை மீறி மதுரோவை கடத்திச் சென்றது குறித்து கண்டனங்கள் கிளம்பியபோது சர்வதேச சட்டங்களைப் பற்றி தனக்கு கவலையில்லை என்றும் இரண்டாவது உலகப்போருக்கு பின்னர் உருவாக்கப்பட்ட உலக ஒழுங்கு (ஐக்கிய நாடுகள்) அமெரிக்காவுக்கு அநாவசியமான சுமையாக இருக்கிறது என்றும் அவர் கூறியது கவனிக்கத்தக்கது.

முன்னெச்சரிக்கையாக படைபலத்தைப் பயன்படுத்துவது என்பது வழமையான தாக்கப்பட்டு விட்டால், எந்தவொரு அரசும் தனக்கு நீண்டகால நோக்கில் அச்சுறுத்தலாக அமையக் கூடியது என்று சந்தேகிக்கும் எந்தவொரு நாட்டின் மீதும் விரும்பிய நேரத்தில் படை பலத்தைப் பிரயோகிக்கக்கூடும். இது பேராபத்தான ஆயுதங்கள் புழக்கத்தில் இருக்கின்ற இன்றைய யுகத்தில் பயங்கரமான முன்னுதாரணமாகிவிடும். சட்டவிரோதமான போர்கள் சர்வ சாதாரணமாகிவிடும்.

தற்போதைய உலகை பல்துருவமயப்பட்டது என்ற ஒரு மாயையில் நாம் வாழ்ந்திருக்கிறோம் என்று தோன்றுகிறது. அதாவது பல நாடுகள் பொருளாதார மற்றும் இராணுவ ரீதியில் ஒப்பீட்டளவில் பலம்பொருந்தியவையாக வளர்ந்துவிட்டதால் அமெரிக்கா போன்ற தனியொரு வல்லரசின் மேலாதிக்கத்தின் கீழானதாக உலக ஒழுங்கு இனிமேல் இருக்காது என்று நம்பினோம்.

எவ்வாறு எந்த நேரத்தில் நடந்து கொள்வார் என்று முன்கூட்டியே கூற முடியாத ட்ரம்பின் தலைமையின் கீழ் கடந்த ஒரு வருடத்துக்கும் அதிகமான காலமாக சர்வதேச சட்டங்களை மதிக்காமல் அமெரிக்கா செய்து வருகின்ற அடாவடித்தனங்களுக்கு எதிராக எதையும் செய்ய முடியாதவையாக உலக நாடுகள் பரிதாபகரமான ஒரு நிலையில் இருக்கின்றன.

இரு மாதகால இடைவெளியில் அமெரிக்கா சீனாவின் நெருங்கிய இரு நேச நாடுகளில் ஆக்கிரமிப்பைச் செய்திருக்கிறது. வெனிசூலாவில் இருந்து மதுரோ கடத்திச் செல்லப்பட்டதையும் கடந்தவாரம் குண்டு வீச்சுக்களில் ஈரானிய ஆன்மீகத் தலைவர் கொல்லப்பட்டதையும் சர்வதேச சட்டமீறல் என்று கண்டனம் செய்யச் சீனாவினால் முடிந்ததே தவிர, வேறு எதையும் உருப்படியாகச் செய்ய முடியவில்லை. ரஷ்யாவின் நிலையும் அதுவே. இரு நாடுகளும் ஈரானுக்கு ஆதரவாக இராணுவ ரீதியான தலையீடுகளைச் செய்ய முடியாதவையாக இருக்கின்றன.

ஒரு வாரம் கடந்து விட்ட நிலையிலும் கூட, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஈரானுக்கு எதிரான அமெரிக்க இஸ்ரேலிய போரை கண்டனம் செய்ய முன்வரவில்லை. அயத்தொல்லா காமெனியின் மறைவுக்கு காலந் தாழ்த்தியே இந்தியா அனுதாபம் தெரிவித்திருக்கிறது. புதுடில்லியில் உள்ள ஈரானியத் தூதரகத்துக்குச் சென்ற இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி அனுதாபப் புத்தகத்தில் கைச்சாத்திட்டார்.

ஈரானியத் தூதரகங்களுக்குச் சென்று அனுதாபப் புத்தகங்களில் கைச்சாத்திட வேண்டாம் என்று உலக நாடுகள் பலவற்றின் தலைநகரங்களில் உள்ள இந்தியத் தூதுவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கின்ற அளவுக்கு அமெரிக்காவைப் புண்படுத்தக்கூடாது என்பதில் மோடி அரசாங்கம் கடுமையான கரிசனையுடன் இருக்கிறது.

இலங்கையின் கரையோரத்துக்கு அப்பால் ஈரானியப் போர்க்கப்பல் அமெரிக்க நீர்மூழ்கியினால் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் இந்து சமுத்திரத்தில் செல்வாக்கைச் செலுத்துவதில் இந்தியாவுக்கு இருக்கும் வல்லமை குறித்து கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

கடற்படைப் பயிற்சிகளில் பங்கேற்ற ஈரானியப் போர்க்கப்பல் விசாகபட்டினத்தில் இருந்து புறப்பட்ட நேரத்தில் இருந்து அதை அமெரிக்க நீர்மூழ்கி கண்

(22ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவை வெல்ல முடியாதென தெரிந்து ஈரான் போரை தொடர்வது ஏன்?

- லூயிஸ் பார்ருச்சோ -

அமெரிக்காவும் இஸ்ரேலும் தங்களின் தொடர்ச்சியான கூட்டு வான்வழித் தாக்குதல்கள் இரானின் ராணுவத் திறன்களைக் கணிசமாகக் குறைத்துள்ளதாகக் கூறுகின்றன.

அவர்களின் வான் பாதுகாப்பு, விமானப்படை கடற்படை மற்றும் தலைமைத்துவம் அழிந்து விட்டன,' என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ட்ரூத் சோஷியல் தளத்தில் பதிவிட்டார். அவர்கள் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறார்கள். நான் மிகவும் தாமதமாகி விட்டது! என்று சொன்னேன் எனவும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் மீதும் அமெரிக்க ராணுவத் தளங்களைக் கொண்டுள்ள மத்திய கிழக்கு நாடுகளின் மீதும் தாக்குதல்களை நடத்துவதன் மூலம் இரான் பதிலடி கொடுத்துள்ளது. ஆனால் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ராணுவ ரீதியாக மேலோங்கியிருப்பதாக பரவலாகக் கருதப்படும் நிலையில், இந்தப் போரில் தாக்குப்பிடிக்க இரானுக்கு என்ன வழிகள் உள்ளன?

### ஈரான் எந்த மாதிரியான உத்தியைப் பின்பற்றுகிறது?

ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் இரானின் பாதுகாப்பு கோட்பாட்டின் முதுகெலும்பாக அமைகின்றன என்று பரவலாக நம்பப்படுகிறது. லண்டனில் உள்ள ராயல் யுனைடெட் சர்வீசஸ் இன்ஸ்டிடியூ ட் சிந்தனைக் குழுவின் மத்திய கிழக்கு பாதுகாப்பு நிபுணரான முனைவர் எச்.ஏ. ஹெல்லியர், இரானின் தற்போதைய இராணுவ அணுகுமுறை அமெரிக்காவையோ அல்லது இஸ்ரேலையோ 'ஒரு வழக்கமான போரில்' தோற்கடிப்பது அல்ல, மாறாக எந்தவொரு மோதலையும் 'நீடித்ததாகவும், பிராந்திய ரீதியாக பரவியதாகவும் மற்றும் பொருளாதார ரீதியாக அதிக விலை உயர்ந்ததாக' மாற்றுவதாகும் என்கிறார்.

மேலும், இரானால் வழக்கமான முறையில் வெற்றி பெற முடியாது. ஆனால் மற்றவர்களின் வெற்றி அதிக விலை கொண்டதாகவும் நிச்சயமற்றதாகவும் இருப்பதை உறுதி செய்வதே அதன் உத்தி என்றும் அவர் கூறுகிறார்.

பிரான்சில் உள்ள சயின்சஸ் போ-வின், சர்வதேச ஆய்வு மையத்தின் உதவிப் பேராசிரியரான நிக்கோல் கிரஜெவ்ஸ்கியும் இக்கருத்தை ஒப்புக்கொள்கிறார். இரானின் இந்த உத்தியை அவர் 'சோர்வு ஊட்டும் போர்' என்று விவரிக்கிறார்.

இது எதிரி நாட்டின் வளங்களை தீர்ந்து போகச் செய்து, அவர்களின் சண்டையிடும் திறன் பலவீனமடையும் வரை தொடர்ச்சியான இழப்புகளை ஏற்படுத்தி அவர்களை சோர்வடையச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட ராணுவ அணுகுமுறையாகும். இதில் ஒரு உளவியல் ரீதியான பரிமாணமும் உள்ளது.

கடந்த ஆண்டு இஸ்ரேலுடன் நடந்த 12 நாள் போரின் போது, இரான் மக்கள் வசிக்கும் பகுதிகள் மீது தாக்குதலை திருப்பியது. மக்களிடையே உளவியல் ரீதியான பயத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துவது இதன் நோக்கம்'' என்கிறார் கிரஜெவ்ஸ்கி

ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் இரானின் பாதுகாப்பில் முதுகெலும்பாக அமைகின்றன என்று பரவலாக நம்பப்படுகிறது.

இஸ்ரேல் உடனான 12 நாள் போரின் போது இரானின் பாலிஸ்டிக் ஏவுகணை இருப்பு கடுமையாக பாதிக்கப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் 'நிலத்தடி சேமிப்பு மற்றும் தொடர்ந்து நடைபெற்று வரும் மறு உற்பத்தி முயற்சிகள் காரணமாக துல்லியமான எண்ணிக்கையை அறிவதில் நிச்சயமற்ற தன்மை உள்ளது' என்று கிரஜெவ்ஸ்கி கூறுகிறார்.

பிப்ரவரி 2026-ல் இரான் சுமார் 2,500 ஏவுகணைகளைக் கொண்டிருந்ததாக



இஸ்ரேல் மதிப்பிடுகிறது. இவை குறுகிய (1,000 கிமீ வரை) மற்றும் நடுத்தர (1,000-3,000 கிமீ) தூரம் வரை பாயும் ஏவுகணைகள் ஆகும்.

சுமார் 2,000 கிமீ தூரம் பாயும் திறன் கொண்ட செஜ்ஜில் ஏவுகணை மற்றும் ஒலியின் வேகத்தை விட பல மடங்கு வேகமாகச் செல்லக்கூடிய ஹைப்பர்சோனிக் ஏவுகணையான இரானில் ஃபத்தாஹ் என அழைக்கப்படும் ஏவுகணைகளை பயன்படுத்தியதாக இரானிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

### ஏவுகணை நகரங்கள்

மேலும், இரானிய அதிகாரிகளும் இரானிய ஊடகங்களும் 'ஏவுகணை நகரங்கள்' என்று அழைக்கப்படும் நிலத்தடி ஏவுகணை வசதிகளைப் பற்றி அடிக்கடி குறிப்பிடுகின்றனர். இருப்பினும் அவற்றின் அளவு மற்றும் இருப்பு பற்றிய விவரங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால் இந்த போர் தொடங்கிய முதல் நாளான பிப்ரவரி 28 முதல் இரானின் பாலிஸ்டிக் ஏவுகணை ஏவுதல்கள் 86வீதம் குறைந்துள்ளதாக அமெரிக்க மூத்த தளபதி ஜெனரல் டான் கெய்ன் கூறினார். மேலும் மார்ச் 4, செவ்வாய்க் கிழமை அன்று இது மேலும் 23வீதம் குறைந்துள்ளதாக அமெரிக்க மத்திய கட்டளை தெரிவிக்கிறது.

இருப்பினும் 'இஸ்ரேலிய உள்கட்டமைப்பு, அமெரிக்க பிராந்திய தளங்கள் மற்றும் அதன் வளைகுடா கூட்டாளிகளைக் குறி வைப்பதற்கும், அதே நேரத்தில் ஹார்முஸ் நீரிணை' வழியாக செல்லும் உலகளாவிய எரிசக்தி விநியோகத்தை அச்சுறுத்துவதற்கும்' இரானிடம் குறிப்பிடத்தக்கத் தாக்குதல் திறன் இன்னும் உள்ளது என்று ஹெல்லியர் கூறுகிறார்.

தொடர்ந்து பேசிய அவர், 'ஹார்முஸ் நீரிணையில் ஏற்படும் சிறிய இடையூறு கூட கடுமையான உலகளாவிய பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்,' என்று குறிப்பிடுகிறார்.

உலகின் 20வீத எண்ணெய் இந்த குறுகிய நீரிணை வழியாகச் செல்கிறது. மேலும் இதனை கடக்க முயலும் எந்தவொரு கப்பலும் தாக்கப்படும் என இரான் கூறுகிறது.

### நேரடி தேசத்தைத் தாண்டிய உத்தி

இரான் மேம்பட்ட ஏவுகணைகள் தட்டுப்பாட்டை எதிர் கொண்டாலும், அதன் டிரோன் திறன் இன்னும் குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதாக கிரஜெவ்ஸ்கி கூறுகிறார். போருக்கு முன்னதாக பல்லாயிரக்கணக்கான 'ஷாஹெத்' டிரோன்களை இரான் தயாரித்ததாகக் கருதப்படுகிறது.

இந்த வடிவமைப்பு ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது, மேலும் அமெரிக்கா கூட இந்தத் தொழில்நுட்பத்தின் சில அம்சங்களைப் நகலெடுத்துள்ளது. இவை நேரடி சேதத்தைத் தாண்டி உத்தி நோக்கத்தையும் கொண்டுள்ளன.

அதாவது, எதிரிகளை விலையுயர்ந்த இடைமறிப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்தக் கட்டாயப்படுத்துவதன் மூலம் 'காலப் போக்கில் வான் பாதுகாப்பு அமைப்புகளை சிதைத்து பலவீனப்படுத்துகின்றன'. இதன் ஒரு பகுதி எதிரியின் இடைமறிப்புத் திறனை சோர்வடையச் செய்வதை உள்ளடக்கியது' என்று கிரஜெவ்ஸ்கி கூறுகிறார்.

இருப்பினும் போர் தொடங்கிய முதல் நாளிலிருந்து இரானின் டிரோன் ஏவுதலும் 73வீதம் குறைந்துள்ளதாக அமெரிக்கா கூறுகிறது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் 2,000க்கும் மேற்பட்ட வான் தாக்குதல்களை நடத்தியுள்ளன. அதே நேரத்தில் இரான் 571 ஏவுகணைகளையும் 1,391 டிரோன்களையும் ஏவியுள்ளது, அவற்றில் பல இடைமறிக்கப்பட்டுள்ளன'' என்று டெல் அவிவை தளமாகக் கொண்ட தேசிய பாதுகாப்பு ஆய்வுகளுக்கான நிறுவனம் கூறுகிறது.

போர் தொடர்வதால், இந்த வேகத்தில் சண்டையைத் தொடர்வது இரு தரப்பிற்கும் கடினமாகி விடும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

டெல் அவிவ்-ஐ தளமாகக் கொண்ட தேசிய பாதுகாப்பு ஆய்வுகளுக்கான நிறுவனம் கூறுகையில், அமெரிக்காவும் இஸ்ரேலும் 2,000க்கும் மேற்பட்ட பல்நோக்கு தாக்குதல்களை முடித்துள்ளன, அதே நேரத்தில் இரான் 571 ஏவுகணைகளையும் 1,391 ட்ரோன்களையும் ஏவியுள்ளது, அவற்றில் பல இடைமறிக்கப்பட்டுள்ளன.

### எவ்வளவு காலம் நீடிக்கும்?

மத்திய கிழக்கிலேயே மிகப்பெரிய இராணுவப் படைகளில் ஒன்றைக் கொண்டுள்ள நாடுகளுள் இரானும் ஒன்றாகும்.

இரான் இராக் போர் தொடங்கிய காலத்திலிருந்தே போரைத் தாங்கும் திறன் இரானுக்கு உருவாகியுள்ளது. இரானுடைய உத்தி எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது, அதன் உள்நாட்டு ஒற்றுமையைப் பொறுத்தே அமையக் கூடும்.

பாதுகாப்பு மற்றும் அரசியல் உயர் மட்டத்தினர் எவ்வளவு தூரம் ஒற்றுமையாக இருக்கிறார்கள் அல்லது அவர்களுக்குள் பிளவுகள் ஏற்படுகிறதா என்பதைப் பொறுத்தே இது அமையும்' என்று கூறும் கிரஜெவ்ஸ்கி, 'பிளவுகள் ஏற்பட்டால் அது இராணுவ உத்தியில் அதிக குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும்' என்று விளக்குகிறார்.

மேலும், 'ஏவுகணை இயக்குபவர்கள் அதிக மன அழுத்தம் மற்றும் சோர்வில் இருப்பது போல் தெரிகிறது, இது தவறான இலக்குகள் மீதான தற்செயலான தாக்குதல் அல்லது துல்லியமற்ற தன்மைக்கு காரணமாகிறது. பல செயல்பாடுகள் மிகவும் ஒழுங்கற்ற முறையில் உள்ளன மற்றும் அங்கு ஒருவித சோர்வு நிலை காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

### அடுத்த கட்ட நகர்வு

இரானின் முக்கிய குறிக்கோள் என்னவென்றால், அண்டை நாடுகளுக்கு நிலைமைகளை 'தாங்க முடியாததாக' மாற்றுவதாகும்.


இதன் மூலம் அந்த நாடுகள் அமெரிக்காவிற்கு அழுத்தம் கொடுக்கலாம் அல்லது குறைந்த பட்சம் ஒரு பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கோ அல்லது போரை முடிப்பதற்கோ அமெரிக்காவை நகர்த்த முயற்சி செய்யலாம்' என்று கிரஜெவ்ஸ்கி கூறுகிறார்.

மேலும் இரானின் தற்போதைய திட்டம் வெற்றி பெறுமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் இப்போது எடுத்திருக்கும் ஆபத்தான முயற்சி இதுதான்' என்று அவர் கூறுகிறார். இருப்பினும், இந்த ஆபத்தான முயற்சி எளிதில் எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும்.


வளைகுடா நாடுகள் 'ஆரம்பத்தில் இரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் போரை எதிர்த்திருந்தாலும், இரானின் பதிலடித் தாக்குதல்களால் இப்போது தங்கள் சொந்தப் பாதுகாப்பிற்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அவர்கள் முடிவு செய்யலாம். எனவே, இரானிடமிருந்து வரும் உடனடி அச்சுறுத்தலை நிறுத்த அமெரிக்காவின் இந்த ராணுவ நடவடிக்கையை ஆதரிப்பதே சிறந்தது என்று அவர்கள் கருதலாம்' என ஹெல்லியர் கூறுகிறார்.

மேலும், 'வளைகுடா நாடுகள் இன்னும் அந்த நிலையை அடையவில்லை என்று நான் நினைக்கிறேன், ஆனால் நேரம் கடந்துக்கொண்டிருக்கிறது' என்றும் அவர் குறிப்பிட்டார்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரலாம். குடும்பத்தில் வீண் பிரச்னை ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் செயல்கள் உங்களுக்கு அதிருப்தியை ஏற்படும். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை கேட்டு நடப்பது ஆறுதலை தரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளுக்கான தடைகள் அகலும்





ரிஷபராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் மன நிம்மதியும் இருக்கும். உறவினர்கள், நண்பர்களின் ஆதரவும் கிடைக்கும். நிதானமாக பேசுவது நல்லது.





மிதுனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மன மகிழ்ச்சி ஏற்பட அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துவது நன்மையை தரும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் அதிகப்படி வருமானம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள். தாய், தந்தையரின் உடல் நிலையில் கவனம் தேவை.





சிம்மராசி அன்பர்களே! தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பூமி வீடு மனையால் லாபம் ஏற்படும். சுபகாரியங்கள் நல்லபடியாக நடக்கும். அடுத்தவர்கள் மூலமாக நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடியாக நடக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேறுமை நீங்கும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள்




கன்னிராசி அன்பர்களே! வீண் செலவுகள் குறையும். பண வரத்து அதிகரிக்கும். எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.




துலாம்ராசி அன்பர்களே! மன திடம் அதிகரிக்கும். சுபச்செலவுகள் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசும் போது கவனம் தேவை. குடும்பாதிபதி சுக்கிரன் ராசியில் இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே சிறு பூசல்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளிடம் நிதானமாக பேசுவது நல்லது. தொழில் ஸ்தானத்தை புதன் பார்ப்பதால் சிறு பிரச்னைகள் தோன்றி மறையும்.





விருச்சிகராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகமாகும். வீண் பேச்சை குறைப்பது நன்மை தரும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தினரது செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். நிதானத்தை கடைபிடிப்பது வீண் பிரச்னை ஏற்படாமல் தடுக்கும். வாழ்க்கை துணை ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நன்மை தரும். எதைப் பற்றியும் விவாதிப்பதை தவிர்ப்பது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! கடும் முயற்சிக்கு பிறகு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். தொலை தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் அவ்வப்போது ஏதாவது சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு மறையும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம். எதிர்ப்புகள் விலகும். காரிய தடைகள் நீங்கும். வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தடைபட்டிருந்த வீடுப் பணிகள் நிறைவடையும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்த சுணக்க நிலை மாறும். முயற்சிகளில் நல்ல பலன் காண்பீர்கள். சகோதரர்கள் வழியில் இருந்த பிரச்னைகள் நீங்கும். குடும்பத்தினரின் செயல்கள் நன்மை அளிக்கக்கூடிய வகையில் இருக்கும். எந்த விஷயத்தையும் கணவன், மனைவிக்கிடையே திட்டமிட்டு செய்வது நன்மை தரும். குழந்தைகள் உங்கள் சொற்படி கேட்டு நடப்பது மனஅமைதியை தரும்.




மீனராசி அன்பர்களே! நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதுர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். அனுபவப்பூர்வமான அறிவுத்திறன் அதிகரிக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் மனம் மகிழும்படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## ஹண்டுவா - சுண்டுக்கொத்து அரசியல்

(16ம் பக்கத் தொடர்ச்சி) தடவையாக கேள்வியை சுருக்கி கேட்கப்பட்டபோதும் அதற்கு பதிலளிக்க UNCLOS INTERNATIONAL LAW என்ற வார்த்தைகளை பல தடவைகள் மீண்டும் மீண்டும் தேவையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டது. இதற்கு மொழி வளக்குறை மட்டும் காரணம் அல்ல சர்வதேச, பிராந்திய விவகாரங்களில் பரந்த அறிவுப் பற்றாக்குறையும் காரணம். இதுவும் ஒரு வகையில் சுண்டுக் கொத்து வெளிவிவகார அரசியல் தான்.

ஈரான் கப்பல்கள் விவகாரம் இந்திய இலங்கை கடற்பரப்பில் எரிந்து கொண்டிருக்கிறது. இந்திய பெருங்கடலின் எதிர்காலம் குறித்த மாநாடு இடம் பெறுகிறது. அமெரிக்கா இஸ்ரேலின் ஈரான் மீதான போர் எங்கள் கடற்பரப்பு வரை விரிந்து விட்டது. இந்த நிலையில் அந்த மாநாட்டிற்கு எந்த முன் ஆயத்தமும் இன்றி, எதிர்பார்ப்புகள் இன்றி வெளியுறவு அமைச்சர் ஒருவர் கலந்து கொள்வதில் உள்ள அர்த்தம் தான் என்ன? இந்த மாநாட்டில் கலந்து கொண்ட சம்பவம் நடந்த போது அந்த மண்டபத்தில் இருந்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ராஜீவ் அமரசூரியவின் இலங்கை அரசாங்கத்திற்கான கோரிக்கையில் நியாயம் இருக்கிறது. இலங்கை பிரதிநிதிகளுக்கு சிறந்த தயாரிப்பு, மற்றும் ஆதரவை வழங்குமாறு அவர் அரசாங்கத்தை கோருகிறார்.

இவ்வாறான கலந்துரையாடல்கள் மனிதாபிமானம், சர்வதேச சட்டம், நடுநிலைமை, அணிசேராமை என்ற வார்த்தையாடல்களுக்கு அப்பால் இலங்கையின் சுயாதிக்கம், இறைமையை எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமின்றி பிரதிநிதித்துவம் செய்ய வேண்டிய பொறுப்பான பணிகள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையில் பிரதமர் பதவி என்பது வெறும் அடையாளம். கல்வி அமைச்சர் பதவிக்கு பொருத்தமானவர்கள் பலர் ஜே.வி.பி –என்.பி.பி.யில் இருக்கலாம். ஹருணி அமரசேகர ஒருவரே இன்றைய அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சருக்கான அனைத்து தகுதிகளையும், ஆளுமையையும் கொண்டவர். இலங்கை மானத்தை சர்வதேசத்தில் காப்பாற்ற அமைச்சர் அவையில் மாற்றம் செய்ய ஜே.வி.பி. பலவத்தை தயாரா? இல்லை அந்த பதவி என்.பி.பி.க்கு அல்ல அது ஜே.வி.பி.க்குரியது என்று அவர்கள் கருதுகிறார்களா? மார்ச் 8 இல் சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட்டு விட்டது. இன்னுமொரு சர்வதேச மகளிர் தினம் வராமலா போகும்? அப்போது ஹருணியும் அருகில் இருக்க பெண்கள் அநுரவின் கரங்களை தொட்டளைவார்கள். எங்கும் எதிலும் சுண்டுக்கொத்து.! ஜனாதிபதியின் அளவு அச்சொட்டு!

## இன்றைய நாஜிகளின் சர்வதேச காடைத்தனம்!

(20ம் பக்கத் தொடர்ச்சி) காணித்துக் கொண்டிருந்தது என்பது தெளிவானது. தனது செல்வாக்குப் பிராந்தியம் என்று இந்தியா உரிமை கோருகின்ற கிரமமாக இந்தியக் கடற்படை ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற கடற்பிராந்தியத்தில் வெளிநாட்டு நீர்மூழ்கி ஒன்றின் பிரசன்னத்தைக் கண்டுபிடிக்கவும் தனது அழைப்பின் பேரில் பயிற்சிக்கு வந்த நேசநாடொன்றின் போர்க்கப்பலின் பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்தியாவினால் இயலவில்லை என்பது கோடிப்புறத்தில் இந்தியாவின் அதிகாரம் தொடர்பில் அசௌகரியமான கேள்விகளைக் கிளப்புகிறது.

இது இவ்வாறிருக்க, கிறீன்லாந்து தீவை அமெரிக்காவுக்குச் சொந்தமாக்கப் போவதாகவும் அதற்காக தேவையானால் படைபலத்தைப் பிரயோகிக்கவும் தயங்கப் போவதில்லை என்றும் ட்ரம்ப் அச்சுறுத்தியபோது அவர் சர்வதேச சட்டங்களை அவமதிக்கிறார் என்று குற்றஞ்சாட்டிய ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் தலைவர்கள் ஈரான் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பைக் கண்டனம் செய்யவோ அல்லது ஆன்மீகத் தலைவர் கொல்லப்பட்டதற்கு அனுதாபம் தெரிவிக்கவோ முன்வரவில்லை.

இன்றைய 'நாஜி'களான ட்ரம்பும் நெதான்யாகுவும் செய்யும் சர்வதேச காடைத்தனத்துக்கு எதிராக எதையும் செய்ய முடியாமல் உலக நாடுகள் பரிதாபகரமாக கை கட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. மத்திய கிழக்கின் புவிசார் அரசியல் முற்று முழுதாக இஸ்ரேலின் நலன்களினால் வடிவமைக்கப்படக்கூடிய சூழ்நிலையை தற்போதைய போர் ஏற்படுத்தக்கூடிய பேராபத்து இருக்கிறது. அதேவேளை, ட்ரம்ப் ஏற்கெனவே அச்சுறுத்தி வருவதைப் போன்று வளங்களைச் சூறையாடுவதற்காக பல நாடுகளில் இராணுவத் தலையீடுகளைச் செய்வதை தடுக்க முடியாமலும் போகலாம். உலக நாடுகள் ட்ரம்பின் போர்வெறிக்கு எதிராக அணிதிரள வேண்டிய நேரம் வந்து விட்டது. தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் மனித குலத்தை அழிவை நோக்கி நகர்த்திச் செல்லும்.

## வாழ்நாள் போராளிகளும் தேர்தல்

(15ம் பக்கத் தொடர்ச்சி) உருவாக்குவது. இதற்குத் தமிழக உதாரணங்கள் கூடத் தேவையில்லை.தாயகத்திலேயே ஒருகாலம் ஆயுதப் போராட்டம் அவ்வாறான கட்டமைப்புகளைக் கொண்டிருந்தது.

கிராம மட்டத்தில் கிராமியப் பொறுப்பாளர்கள் அல்லது வட்டாரப் பொறுப்பாளர்கள் இருப்பார்கள்.அவர்களுக்கு பொறுப்பாக ஏரியா பொறுப்பாளர் இருப்பார். அவருக்கு மேல்.மாவட்டப் பொறுப்பாளர் இருப்பார்.அவருக்கு மேல் அரசியல் துறைப் பொறுப்பாளர் இருப்பார். இது அரசியல் துறைக்கு மட்டுமல்ல.நிதித்துறை, படைத்துறை, புலனாய்வுத் துறை முதலாக எல்லாத் துறைகளுக்கும் இருந்தது. இந்த கட்டமைப்புகளுக்கு ஊடாகத்தான் எண்பதுகளில் எல்லா இயக்கங்களும் வளர்ச்சி பெற்றன. எனவே தமிழ்த் தேசிய அரசியலை பாரம்பரிய தொழில்சார் அரசியலாகக் கருதாமல், புரட்சிகரமான மிதவாத அரசியலாகக் கருதுபவர்கள், பயில்பவர்கள் முதலில் செய்யவேண்டியது கட்டமைப்புச் சார்ந்து சிந்திப்பது தான். எதையும் கட்டமைப்புக்குள்ளால் சிந்தித்தால் தான் நல்லகண்ணுகளை தலைவர்களை ஆக்கலாம். கெட்டகண்ணுகளை பொதுவாழ்வில் இருந்து தோற்கடிக்கலாம்.

## ஈரானுக்கு எதிரான போரில் மாபெரும் வெற்றி!

(3ம் பக்கத் தொடர்ச்சி) வருகிறோம் என்பதில் சந்தேகமில்லை. அதோடு, நாம் தொடர்ந்து செயல்பட்டு கொண்டிருக்கிறோம். ஈரானிய மக்களுடன் சேர்ந்து நாம் வெற்றி பெற்றால், அவர்கள் தற்போது சந்தித்து வரும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை அளிக்க முடியும். நாம் மாற்றத்தை உருவாக்குவோம். இஸ்ரேலின் சர்வதேச நிலைப்பாட்டிலும் நாம் பெரிய மாற்றங்களை நிகழ்த்தி வருகிறோம் என தெரிவித்துள்ளார்.

# என்னுடைய கர்ப்பம் மட்டுமே அதற்குக் காரணம்?

தென்னிந்திய சினிமா நடிகை திரிஷா இப்போது சமீப காலமாக அடிக்கடி செய்திகளில் இடம்பிடித்து வருகிறார். தமிழ் சூப்பர் ஸ்டார், தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் மனைவி சங்கீதா விவாகரத்து கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த விவகாரம் வைரலாகி வரும் நிலையில், விஜய் திரிஷா இடையே காதல் உறவு என்ற ஊகங்கள் இப்போது ஹாட் டாபிக் ஆகியுள்ளது. சமீபத்தில் சென்னையில் நடந்த ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு விஜயும் திரிஷாவும் ஒரே காரில் வந்ததுடன், ஒரே நிற பட்டு உடைகள் அணிந்து ஜோடியாக காணப்பட்டனர்.



இந்த புகைப்படங்கள், வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வைரலானது. இருவரும் மணமக்களை வாழ்த்தி மேடையில் நின்ற வீடியோக்களும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சங்கீதா, விஜயிடமிருந்து விவாகரத்து கோரி செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில், விஜய் ஒரு நடிகையுடன் திருமணத்தை மீறிய உறவில் இருப்பதாக குற்றச்சாட்டு எழுப்பியுள்ளார்.

தனக்கு நியாயம் கிடைக்கா விட்டால் அந்த நடிகை யார் என்று வெளியிடுவேன் என்று சங்கீதா கடுமையான கருத்துகளை தெரிவித்ததாகவும் தகவல்கள் வெளியாகின.

இந்த கருத்துகள் வைரலான நிலையில், விஜய் திரிஷா ஒரே காரில் காணப்பட்டதால், சமூக வலைதளங்களில் அந்த நடிகை திரிஷா தான் என்று நெட்டிசன்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த சூழலில், திரிஷாவின் பழைய எங்கேஜ்மென்ட் ரத்தான விவகாரம் மீண்டும் வைரலாகி வருகிறது. 2015 இல் சென்னை வியாபாரி வருண் மணியன் உடன் திரிஷாவுக்கு எங்கேஜ்மென்ட் நடந்தது. ஆனால் சில மாதங்களிலேயே அது ரத்து செய்யப்பட்டது. இது குறித்து திரிஷா ஒரு பேட்டியில் கூறியது இப்போது மீண்டும் வைரலாகி உள்ளது.

என்னுடன் எங்கேஜ் ஆன நபர், பல கட்டுப்பாடுகளை வைத்தார். திருமணத்துக்குப் பிறகு சினிமாவில் நடிப்பதை நிறுத்த வேண்டும் என்றார். அதனால் நான் அவருடன் திருமணம் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்தேன்.

நான் கர்ப்பமானால் மட்டுமே சினிமாவில் இருந்து பிரேக் எடுப்பேன். என் கர்ப்பம் மட்டுமே நான் சினிமாவில் நடிப்பதை தடுக்க காரணமாக இருக்கும். இல்லையென்றால் என் கடைசி மூச்சு வரை நடிப்பேன். ஹீரோயின் ரோல்கள் வராவிட்டாலும், எனக்கு ஏற்ற கேரக்டர் ரோல்கள் செய்வேன். ஆனால் நடிப்பை ஒரு போதும் விட்டுவிட மாட்டேன்.

இந்த பழைய கருத்துகள் இப்போது மீண்டும் சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன.

மறுபக்கம், தற்போது திரிஷா மீது எழும் கருத்துகளுக்கு மத்தியில் அவர் இன்ஸ்டாகிராமில் போட்ட பதிவு வைரலாகி உள்ளது. தன் செல்ல நாய் இஸ்ஸி கிருஷ்ணன் (Izzy Krishnan) தூங்கும் போது தோகை ஆட்டுவதை வீடியோவாக போட்டுள்ளார். அதில் "Currently chasing cats in dreamland" என்று கேப்ஷன் கொடுத்துள்ளார்.

இந்த போஸ்ட் இப்போது வைரலாகி, பலரும் விளக்கம் தேடி வருகின்றனர். விஜய் திரிஷா ஜோடியாக 5 படங்களில் நடித்துள்ளனர். அதில் 'கில்லி', 'திருப்பாச்சி', 'லியோ' போன்ற பிளாக் பஸ்டர் ஹிட் படங்கள் உள்ளன. இந்த பழைய ஜோடி மீண்டும் செய்திகளில் இடம்பிடித்துள்ளது.

இது இவ்வாறிருக்க தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவுக்கும் நேஷனல் கிரஷ் என்று வர்ணிக்கப்படும் ராஷ்மிகா மந்தனாவுக்கும் திருமணம் நடைபெற்றது.

நடிகர் விஜய்தேவரகொண்டா – ராஷ்மிகா காதல் திருமணம் உதய்ப்பூரில் உள்ள நட்சத்திர ஆடம்பர ரிசார்ட்டில் நடைபெற்றது. இவர்களின் திருமணம் காலை 10.10 மணிக்கு பாரம்பரிய சடங்குகளின் படி குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் புடைசூழ கோலாகலமாக நடைபெற்றது.

திருமணத்திற்காக விஜய் தேவரகொண்டா ராஷ்மிகா குடும்பத்துடன் சில தினங்களுக்கு முன்பு ஐதராபாத்தில் இருந்து உதய்ப்பூர் புறப்பட்டு சென்றனர். திருமணத்திற்கு முந்தைய கொண்டாட்டங்கள் கடந்த தினங்களில் நடைபெற்றது.

இருப் பினும் அதிகாரப்பூர்வ விஜய் தேவர கொண்டா ராஷ்மிகா திருமண புகைப்படங்களுக்காக ரசிகர்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com




# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் தவறு செய்யாதவர்கள் அஞ்சமடையத் தேவையில்லை!

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான விசாரணைகள் எவ்வித அரசியல் பாகுபாடுமின்றி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், தவறு செய்யாத எவரும் இது குறித்து அச்சமடையத் தேவையில்லை என்றும் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.அரசியல் விவாதம்

புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி கைது செய்யப்பட்டமை அரசியல் வட்டாரங்களில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், விசாரணைகளை குழப்ப நினைப்பவர்களுக்கு மத்தியில் அரசாங்கம் சட்டத்தை முறையாக அமுல்படுத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

12ஆம்திகதி வியாழக்கிழமை மொனராகலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி கைது செய்யப்பட்டமை பெரும்பாலான அரசியல்வாதிகள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அதற்கான காரணம் என்ன என எமக்குத் தெரியாது. நாம் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் குறித்த விசாரணைகளையே முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதை விடுத்து, வெளியில் அவற்றை குழப்பும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தம் மீது எவ்வித தவறும் இல்லை என்றால், எவரும் பதற்றமடையத் தேவையில்லை. இந்த விசாரணைகளை முடிந்தளவு துரிதமாக நிறைவு செய்வதற்கு அரசாங்கமும் நீதி அமைச்சும் தீர்மானித்திருக்கிறது. எனவே தான் தினந்தோரும் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படுகின்றன. மறுபுறம் வங்குரோத்தடைந்த எதிர்க்கட்சிகள் கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றன.

நாம் எவ்வித பாகுபாடும் இன்றி கட்சி பேதமின்றி அரசியலமைப்பின் 12 (01) உறுப்புரையை சரியாகப் பயன்படுத்தும் முறையான அரசாங்கமாக செயற்படுகின்றோம். இது ஜனாதிபதி தலைமைத்துவம் வகிக்கும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமாகும். இந்நாட்களில் எமது கடற்பரப்பை அண்மித்த பகுதிகளில் பாரியளவிலான பெருந்தொகை போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் எவ்வித தடையும் இன்றி முன்னெடுக்கப்படும்.



அந்த வகையில் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டால், விசாரணைகள் நிறைவடையும் வரை பிணை கிடையாது என்றவாறு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளன. கைப்பற்றப்படும் போதைப் பொருட்கள் முறையாக அழிக்கப்படுவதில்லை என்றும், எனவே அவை சமூக மயப்படுத்தப்படுவதாகவும் விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றனர். இது தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடப்பட்டு, அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்ட நீதி அமைச்சின் உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவின் ஊடாக ஆராயப்பட்டு வருகிறது.

அதற்கமைய மாதிரிக்காக மாத்திரம் சிறிய தொகையை வைத்துக் கொண்டு எஞ்சியவற்றை உடனடியாக அழிப்பதற்கான நடவடிக்கை குறித்து அந்த குழு அவதானம் செலுத்தி வருகின்றது. அதேபோன்று ஆழ் கடலில் கைப்பற்றப்படும் போதைப் பொருட்கள் குறித்து வழக்கு தொடர முடியுமா என்ற பிரச்சினையும் காணப்பட்டது. எனவே தான் அது குறித்த சட்டத்திலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, ஆழ் கடலில் கைப்பற்றப்படும் போதைப்பொருட்கள் குறித்தும் வழக்கு தொடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

# மலையகத் தமிழர்கள் ஒரு தேசிய இனம்! ஜப்பானியத் தூதுவரிடம் மனோகணேசன் வலியுறுத்து!



இலங்கையில் வாழும் மலையகத் தமிழ் மக்கள் வெறும் தோட்டத் தொழிலாளர் சமூகமாகச் சுருக்கப்படாமல், அவர்கள் இந்த நாட்டின் ஒரு தேசிய இனமாக வளர்ந்துள்ளனர் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இலங்கைக்கான ஜப்பான் தூதுவிடம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவர் இல்லத்தில், இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசோமடாவுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று 12 மார்ச் 2026 வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன் போது ஜப்பானிய தூதுக்குழுவினரின் சிறப்பான வரவேற்பிற்கு நாட்டு மக்கள் சார்பாக நன்றி தெரிவித்த மனோ கணேசன், இந்நாட்டில் வாழும் சுமார் 15 இலட்சம் இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சமூக மற்றும் பொருளாதார சவால்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், இலங்கையின் வரலாற்றில் நீண்டகாலமாக மிக அதிகளவில் உதவி வரும் ஒரு நட்பு நாடாக ஜப்பான் திகழ்கிறது. அந்த உதவிகள் இந்நாட்டின் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் மலையகத் தமிழ் மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை ஜப்பான் அரசு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக, பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஜப்பான் அரசு இனி வரும் காலங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தோட்டங்கள் மற்றும் பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களுக்கு நேரடியாகப் பயன் அளிக்கும் வகையிலான திட்டங்களைத் தீர்மானித்துச் செயற்படுத்துமாறு நாம் கோருகிறோம்.இலங்கை வரலாறு எமது மக்களை ஒரு இலங்கை தேசிய இனமாக அடையாளங் காணுங்கள். நாம் இங்கே பல்வேறு துறைகளில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறோம். இன்றைய அரசாங்கம் பல விடயங்களைப் பேசுகிறது, ஆனால் அவை இன்னும் செயல் வடிவம் பெறவில்லை. ஆகவே, ஜப்பான் தமது உதவிகள் இந்த ஒடுக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்றார்.